விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 93

வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (26.10.2012)

பக்கங்கள்: பதினாறு




## தமிழருக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் கூட்டமைப்பு ஆர்வம்

### யாழ்ப்பாணத்தில் சீனத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழருக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக உள்ள தாக அவர்களோடு நடத்திய சந்திப்புக்களில் தாம் கண்டு கொண்டுள்ளதாக இலங்கைக் கான சீனத் தூதுவர் வூ ஜாங்கோ தெரிவித்தார்.

யாழ்.நூலகத்தில் நேற்று வியா ழக்கிழமை நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின் போது இவ்வாறு கூறினார்.

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் கொழும் பில் என்னைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் 02



யாழ்.மாநகர சபைக்கு நேற்று விஜயம் செய்த கொழும்பிலுள்ள மக்கள் சீனக் குடியரசுத் தூதுவர் வூ ஜியாங்கோவை மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம்

## தாதிகள் சேவைக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

இலங்கை தாதியர் சேவைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற் கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

2009, 2010 மற்றும் 2011 ஆம் வருடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் விஞ்ஞான பாடநெறி க்குரிய, உயிரியல், கணிதம் மற் றும் விவசாய விஞ்ஞானப் பாட நெறியின் அனைத்துப் பாடங்களிலும் ஒரே 02

## லண்டன் சென்ற இலங்கைக் குழு புலம்பெயர் தமிழர் குழுவுடன் பேச்சு

### மேற்கு நாடுகளிலிருந்து சென்ற தமிழர்களுடன் முக்கிய கலந்துரையாடல்

(ஆர்.சிவரூபன்)

பிரிட்டனுக்குச் சென்றிருந்த இலங்கை அரசியல் கட்சிகளின் குழு, நேற்று லண்டனில் புலம் பெயர் தமிழர்கள் சிலரை சந் தித்து உரையாடியிருக்கிறது. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகத் தேசிய மட்டத்தி லும், சர்வதேச மட்டத்திலும் எழுந்திருக்கும் புதிய சூழ்நிலை கள் பற்றி இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக லண்ட னிலிருந்து கிடைக்கும் செய்தி கள் தெரிவித்தன.

இலங்கையிலிருந்து சென்ற சர்வ கட்சி அரசியல் குழுவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின் எம்.பி.திரு. வசந்த சேனநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.திரு.ஹரேன் பெர் னாண்டோ ஆகியோர் தலைமை தாங்கிச் சென்றனர். நேற்றுமுன் தினம் இலங்கையிலிருந்து புறப் பட்ட இந்தக் குழு பிரிட்டன், அவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகள் உட்பட பல்வேறு நாடு களில் புலம்பெயர்ந்து 02

## தெஹிவளை ரயில் நிலையக் குண்டுவெடிப்பு தமிழ் இளைஞருக்கு 20 வருட கடூழியச் சிறை

(கொழும்பு)

தெஹிவளை ரயில் நிலையத்திற்கு அருகில் குண்டொன்றை வெடிக்கச் செய்து ஐந்து பேரைக் காயப்படுத்திய சம்பவத்தில் குற்றவாளியாகக் இனங் காணப்பட்ட ஒருவருக்கு 20 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள் ளது.

குறித்த குண்டுவெடிப்புச் சம்பம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.

2008ஆம் ஆண்டு இடம்பெற்ற இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் தொடர்பு டையவர் எனக்கூறி கனகராஜா நிஷாந் தன் என்பவர் மீது ஏழு குற்றச்சாட்டுக் களின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டது.

கனகராஜா நிஷாந்தனுக்கு 20 வருட கடூழியச் சிறை தண்டனையும் ஓர் இலட்சத்து 25 ஆயிரம் ரூபா 02

## இராணுவ ரீதியாகப் புலிகள் மீள இணையும் சாத்தியமில்லை

### முன்னாள் புலிப்பேச்சாளர் தயா மாஸ்டர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் சுயலாபத்துக்காக இலங்கைத் தமிழர் விடயத்தை பயன்படுத்திக் கொள் கின்றனரெனப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் பேச்சாளர் தயா மாஸ்டர் எனப்படும் தயாநிதி தெரிவித்துள்ளார். 'த ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இத னைத் தெரிவித்துள்ளார். வைகோ உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்து வருகின்றனர். 02




## அமைச்சர் டக்ளஸ் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனு

(யாழ்ப்பாணம்)

சூளைமேடு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப் போவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார். சூளைமேட்டுச் சம்பவத் திற்கும் தமக்கும் நேரடியாக எந்தவிதத் தொடர்புகளும் இல்லை யெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

#### ஐக்கிய அரபு எமிரேட்ஸில்

## மூன்று வயதுக் குழந்தையைக் காப்பாற்ற முனைந்த இரு இலங்கைப் பெண்கள் பலி

(துபாய்)

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் உள்ள விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்தில் விழுந்த மூன்று வய துக் குழந்தை ஒன்றைக் காப் பாற்ற முற்பட்ட இரண்டு இலங் கைப் பணிப்பெண்கள் உயிரிழந் ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புஜய்ரா - டிப்பா பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது. குறித்த குழந்தை தவறி நீச் சல் தடாகத்தில் விழுந்தபோது, விடுதியின் பாதுகாப்பு அதிகாரி கள் பக்கத்தில் இருக்கவில்லை.

இத்னைத் தொடர்ந்து இலங் கைப் பெண்கள் இருவரும் தடா கத்தில் குதித்து, குழந்தையைக் காப்பாற்ற முற்பட்டுள்ளனர். எனினும் குழந்தை 02

## பிரிட்டன் வீசா விண்ணப்பத்துக்கு புதிய நடைமுறை அமுலாகிறது

(கொழும்பு)

கொழும்பில் கையளிக்கப்படும் வீசா விண்ணப்பங்களை சென்னை பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானி- கராலயத்தில் உள்ள பிரிட்டன் எல்லை முகவரகம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முதல் கையாளும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கையின் வீசா விண்ணப் பங்களில் அநேகமானவை 2008 ஆம் ஆண்டிலிருந்து சென்னை யிலேயே பரிசீலனை செய்யப்பட் டன.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் வீசா பிரிவு எதிர்வரும் 31ஆம் திகதி யுடன் மூடப்படும்.

விஸா விண்ணப்பங்களை முன் னர் போலவே வீசா விண்ணப்ப நிலையத்திலேயே ஒப்படைக்க லாம். 90 சதவீத வீசா விண்ணப்பங்கள் 15 02

# டெசோ தீர்மானங்களுடன் ஸ்டாலின், டி.ஆர்.பாலு முப்பதாந் திகதி ஐ.நா. பயணம்

டெசோ மாநாட்டு தீர்மானங்களை கொடுப்பதற்காக, தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் இம்மாதம் 30ம் திகதி ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்கிறார்.

இவருடன் டி.ஆர்.பாலு எம்.பி., யும் செல்கிறார். சென்னையில், ஆகஸ்ட், 12ம் திகதி, டெசோ மாநாட்டை தி.மு.க., நடத்தியது.

இதில் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு, சம உரிமை, அரசியல் அதிகாரம் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

“இத்தீர்மானங்கள் மீது, இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஐ.நா.சபைக்கு செல்வோம் என்று, டெசோ மாநாட்டில், தி.மு.க., தலைவர் கருணாநிதி அறிவித்திருந்தார்.

இதற்காக ஐ.நா., நிர்வாகிகளிடம் திகதி கேட்டு, தி.மு.க., அணுகியது.

இரண்டரை மாத இடைவெளிக்குப் பின், ஐ.நா., சபையின் அனுமதி கிடைத்துள்ளது.

டெசோ மாநாட்டு தீர்மானங்களை எடுத்துக்கொண்டு, தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின், பார்லிமென்ட் தி.மு.க., தலைவர் டி. ஆர்.பாலு ஆகியோர், இம்மாதம், 30ம் திகதி, ஐ.நா., சபைக்கு செல்கின்றனர்.

நியூயார்க் நகரில் உள்ள, ஐ.நா.,சபையின் தலைமையகத்திலும், ஜெனிவாவில் உள்ள ஐ.நா.,சபையின் அகதிகள் ஆணையத்திலும், தீர்மானங்களை அளிக்கின்றனர்.

ஈழத் தமிழர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட பிரச்னைகளில், உடனடி நடவடிக்கை எடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என, ஐ.நா., சபையை கேட்டுக் கொள்கின்றனர்.

## யாழ். ஆஸ்பத்திரியிலும் பணிப் பகிஷ்கரிப்பு

# சிகிச்சை பெறவந்த ஏராளமான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

யாழ்ப்பாணம்

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் மேற்கொண்டு வரும் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக யாழ். போதனாவைத்திய சாலையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

வைத்தியசாலையின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதுடன், வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் பிரிவுகள் என்பன செயலிழந்தன. எனினும் அவசர சிகிச் சைப் பிரிவு இயங்கியதாக வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கூறினர்.

இந்த பகிஷ்கரிப்பினால் சிகிச்சை பெறவந்த ஏராளமானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

# யாழ். நகரில் இரு பள்ளிவாசல்களில் நாளை ஹஜ் தொழுகை இடம்பெறும்

நாளை சனிக்கிழமை ஹஜ் பெருநாள் தினமாகும். இவ்வருட ஹஜ் பெருநாள் ஜும்மாவும், பெருநாள் தொழுகையும் யாழ்ப்பாணத்தில் இரு பள்ளிவாசல்களில் இடம்பெறுமென யாழ். உலமா சபையினர் தீர்மானித்துள்ளார்கள்.

யாழ். மஸ்ஜித் முஹம்மதியா (புதுப்பள்ளி) யில் பெண்களுக்கும், பெரிய பள்ளியில் ஆண்களுக்கும் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழில் சீரற்ற கால நிலையை அவதானித்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்ற வருட ஹஜ் பெருநாளும் இதே நடைமுறையைப் பின்பற்றப் பட்டது.பெருநாள் தொழுகையை நிறை வேற்றிய பின்னர் குர்பான் கட மையை தொடர்ந்து மூன்று தினங்கள் மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதே நேரம் போயா தினத்தில் குர்பான் கடமையை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். - மீரான்.

# யாழ். முஸ்லிம்கள் விரட்டப்பட்ட நினைவு தினக் கூட்டம் 30ஆம் திகதி

எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் மாபெரும் பொதுக் கூட்டமும் ஒன்று கூடலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடமாகாண முஸ்லிம் மக்களை 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி பிறந்த மண்ணை விட்டுப் பலவந்தமாக புலிகள் வெளியேற்றினர். யாழ்ப்பாணத்தில் பல நூற்றாண்டுகாலமாக வாழ்ந்துவந்த முஸ்லிம்களை இரண்டு மணி நேர அவகாசத்தில் வெளியேறுமாறு கட்டளையிட்டார்கள். எதிர்வரும் 30ஆம் திகதி 22 வருடமாகின்றதை குறித்த நினைவு நாளாகும்.

திரும்பவும் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகவுள்ள இந்நேரத்தில் எதிர்கால நடவடிக்கை பற்றிய விசேட கூட்டத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற காரணிகள் என்ற தொனிப் பொருளில் பேராசிரியர் எச்.எஸ் ஹிஸ்புல்லாவும், யாழ் மாவட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு எவ்வாறு ஒத்துழைப்பு நல்கலாம் என்ற தலைப்பில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் விசேட உரையாற்றுகின்றனர்.அனைவரையும் இவ் நிகழ்வில் ஒன்றுகூடுமாறு யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலை வர் எம்.எம்.நிலாம் வேண்டுகின்றார். - மீரான்.

# மூன்று வயதுக்...(தொடர்)

மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும், பெண்கள் இருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் விடுதியின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ ரீதியாக...(தொடர்)

இது அவர்களின் அரசியல் லாபத்துக்காக மேற்கொள்ளப்படுகின்ற சுயலாப பிரசாரமே தவிர, அதில் உண்மை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இராணுவ ரீதியாக புலிகள் மீண்டும் ஒன்றிணையும் சாத்தியம் தற்போதைக்கு இல்லை.எனினும் வெளிநாடுகளில் இருந்துக் கொண்டு அரசியல் ரீதியாக இலங்கைக்கு அழுத்தங்களை அவர்களால் கொடுக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் - அரசாங்கமும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் ஒன்றுக்கு வருவதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்றும் தயாமாஸ்டர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ள என்பதும் பொய்யான தகவல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எந்தவொரு புலம்பெயர் தமிழர் அமைப்பும் இலங்கையுடன் பேசாதாம்

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய பருவகால மீளாய்வு கூட்டத்திற்கு முன்னதாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதத்தில் தேவைய்யற்ற பிரசார நடவடிக்கையில் ஈடுபட வேண்டாமென்று உலகத் தமிழ் பேரவை என்ற அமைப்பு அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளரான சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலம்பெயர்வாழ் தமிழர் அமைப்புடன் இலங்கை அரசாங்கம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் பேச்சு வார்த்தை நடாத்துவாரென்றும் வெளிவந்த செய்திகள் எவ்வித ஆதாரங்களும் அற்றவை என்றும் சுரேன் சுரேந்திரன் சொன்னார்.

எந்தவொரு நம்பத்தகுந்த புலம்பெயர் வாழ் தமிழர் அமைப்புடன் இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர் கூறினார்.

புலம் பெயர் வாழ் தமிழர்களின் சிரேஷ்ட பிரதி நிதிகளுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திப்பு ஒன்றினை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இப்போது இருப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புகெல கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்த கருத்துத் தொடர்பாக பதிலளிக் கையிலயே சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

# பிரிட்டன் வீசா...(தொடர்)

நாட்களுக்குள் பரிசீலிக்கப்படும்.

கடவுச்சீட்டை இலங்கைக்கு வெளியே கொண்டு செல்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆயிரம் ரூபாவை வீசா விண்ணப்ப நிலையத்தில் செலுத்த முடியும். வீசா விண்ணப்ப நிலைய நிர்வாகச் செலவாக 200 ரூபா அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, தொலைபேசியூடாக - 331 0094 773908011 உடன் தொடர்புகொள்ளவும்.

அல்லது, Chennai.visaenquiry@fco.gov.uk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல்களை அனுப்பலாம்

# தமிழகத்திலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு நடமாடும் சேவை திருமலையில் நடைபெறும்

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27ம் 28ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இந்த சேவை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது உள்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால், இந்தியாவுக்கு அகதிகளாக சென்று, நாடு திரும்பியவர்களுள் இலங்கை குடியுரிமை இல்லாத வர்களுக்காக இந்த சேவை நடத்தப்படுகிறது.

இதற்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் இதற்கு அனுசரனை வழங்குகிறது. சுமார் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தாதிகள்...(தொடர்)

தடவையில் சித்தியடைந்திருக்கும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அரச வர்த்தமானியில் பெற்றுக் கொள்ளலாம்.

# தெஹிவளை ரயில் நிலைய...(தொடர்)

அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் மேலும் இரண்டரை வருட சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

# தமிழருக்கான...(தொடர்)

மற்றும் வடபகுதிக் கட்டமைப்புக்களில் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

உண்மையில் யாழில் வீதி அபிவிருத்தி துரிதகதியில் நடபெறுகின்றது. அதை நான் நேரில் பார்ப்பதற்காக வந்துள்ளேன்.

யாழின் அபிவிருத்தியில் சீன அரசாங்கம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

வீதி அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றும் சீன அரசாங்கம் வடபகுதியில் வீதிப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொண்டு வருகின்றது. யாழ்ப்பாணம் யுத்தத்திற்கு பின்னர் பாரிய துரித வளர்ச்சியடைவதாக என்னால் பார்க்க முடிகின்றது என்றார்.

யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதுவர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தாம் அருமைநாயகத்தைச் சந்தித்து யாழில் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடினார்.

அதன் பின்னர் யாழ்.நூலகத்திற்கு சென்ற சீனத் தூதுவர் யாழ்.நூலகத்தின் வளச்சிக்காக ஒரு மில்லியன் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அதன் பின்னர் நல்லூருக்கு நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சென்றாரென்று தெரிவிக்கப்பட்டது.

# லண்டன் சென்ற இலங்கை...(தொடர்)

வாழும் தமிழர்களின் குழு ஒன்றினை லண்டனில் சந்தித்துப் பேசியது.

இந்தியா, பிரிட்டன, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இருந்து எழுகின்ற அழுத்தங்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதாகத் தெரிய வருகிறது. லண்டனில் வாழும் திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கனடாவில் வாழும் எஸ்.மனோரஞ்சன், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த டாக்டர் நோயல் நடசேன் மற்றும் இராஜசிங்கம் இராஜேந்திரன் உள்ளிட்ட பலர் இலங்கைத் தூதுக் குழுவினரைச் சந்தித்துப் பேசினர் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் பேச்சாளரான சுரேஷ் சுரேந்திரன் என்பவருடன் தொடர்புகொண்டு இலங்கை அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் வருகை பற்றிக் கேட்டபோது, அவர் பதில் எதுவும் கூற மறுத்துவிட்டார். “இது எமக்கு அக்கறைக்குரிய விடயம் அல்ல” என்று மட்டும் பதிலளித்தார்.

கடந்த வருடமும் இவ்வாறான குழுவொன்று லண்டன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய உளவுப் பிரிவான றோ விடம் பணம் பெற்றுக்கொண்டு இந்தியாவுக்கு வக்காலத்தா?

## சஜித் பிரேமதாச எம்.பி.யைச் சாடினார் அமைச்சர் விமல்

இந்திய உளவுப்பிரிவிடம் மில்லியன் கணக்கில் பணம் பெறுகின்றவர்கள் இந்திய நாட்டுப் பிரதிநிதியாகச் செயற்பட்டு இந்தியாவுக்கு வக்காலத்து வாங்க வேண்டாம் என்று அமைச்சர் விமல் வீரவன்ச உரக்கச் சொன்னார். மேற்குறிப்பிட்டவாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எம்.பி சஜித் பிரேமதாஸவைப் பார்த்துக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ உயிருடன் இருந்தால் சஜித்தின் செயற்பாடுகளைப் பார்த்து இப்படி ஒரு பிள்ளையையா பெற்றெடுத்தேன் என்று மனம் வருந்தித் தற்கொலை செய்திருப்பார் என்றும் விமல் மேலும் கூறினார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நடந்த கலந்துரையாடலின்போது விமல் வீரன்சவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டபோதே இவ்வாறு கூறினார்.

'இந்திய உளவுப்பிரிவிடம் மாதமொன்றுக்கு 5 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டு இந்தியப் பிரஜையாக இலங்கையில் செயற்பட்டு இந்தியாவுக்கு வக்காலத்து வாங்க வேண்டாம்' என்று உரக்கக் கடுந்தொனியில் வீரவன்ச கூறினார்.

அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது போன்று வீடமைப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என சஜித் கேட்கப்பட்ட வேளையே இவ்வாறு தர்க்கம் ஏற்பட்டது.

இலங்கையில் வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்தியா முன்வந்திருப்பது எந்த அடிப்படையில் என்பது தெரியாது. எனினும், வடக்கு கிழக்கு மக்களுக்காக அரசு வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றது. இந்தியா இலங்கையில் வீடுகளை அமைப்பதற்கு 35100 மில்லியன் ரூபாக்களை ஒதுக்கியிருக்கின்றது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வீடமைப்பு மட்டுமல்லாது வீதி அபிவிருத்தி உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் அப்பணத்தில் இருந்தே செலவு செய்கின்றனர் எனக் கூறினார்.

# தமிழ் பேசும் பொலிஸார் மேலும் 240 பேர்

தமிழ்பேசும் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தமிழ் தெரிந்த பொலிசாரை சேவையில் ஈடுபடுத்தும் திட்டத்தின் கீழ் புதிதாக 240 பேரை கான்ஸ்டபிள்களாக பொலிஸ் திணைக்களம் இணைத்துக் கொண்டுள்ளது.

இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்தார்.

கான்ஸ்டபிள் சேவைக்காக 350 பேர் பேர் தேவைப்பட்டபோதிலும் 240 பேரை மாத்திரமே இணைத்துக்கொள்ள முடிந்ததாகவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

# நிதி ஒதுக்கீடு

(வலிகாமம்)

வடமராட்சி வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மாணவர்களின் நூலகத் தேவைக்கான புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு யாழ் மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது பன்முகப்படுத்திய நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் கற்பித்தல் தேவைக்கு வேண்டிய நூல்களை கொள்வனவு செய்யும் முகமாக இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கல்லூரியின் நூல் நிலையத்திற்கு வேண்டிய நூல்களை கொள்வனவு செய்வதன் மூலம் இடைநிலை மற்றும் உயர்தரங்களில் கல்வி கற்கும் சுமார் அறுநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் - பொதுமக்கள் உறவு

(வலிகாமம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமை நடைபெறும் மக்கள் தினத்தில் யாழ்.மாவட்ட பொது மக்கள் கலந்துகொள்வதுடன் தமது பிரச்சினைகளைக் கூறி உரிய தீர்வுகளையும் பெற்று வருவதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெறும் பொதுமக்கள் தினத்தில் வடமாகண பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்கிறார்கள்.

இந்த நாளில் பொலிஸார் சம்பந்தமான குறைகள் இருந்தால் அதனைத் தமக்குப் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக முறையிடலாம் எனவும் மற்றும் பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டும் நீண்ட நாட்களாகியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அது சம்பந்தமாகவும் மற்றும் பொது மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் முறையிடலாம் எனவும் தெரிவித்துள்ளதுடன், குறிப்பிட்ட தினத்தில் தம்மைச் சந்திக்கும் பொதுமக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் திருப்பதியுடன் செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# வெள்ளி, ஞாயிறு ரியூசன் இல்லை

(வலிகாமம்)

வலி வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த மாதம் முதல் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் வேளைகளிலும் தனியார் வகுப்புகள் நடைபெறமாட்டாது. அனைவரின் வேண்டுகோளையும் ஏற்று பிரதேச சபை ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோசுகிர்தன் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு நாட்களும் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படுவதன் மூலம் இளைஞர் தலைமுறையினர் இந்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு சென்ற தமது மத வழிபாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அறநெறிப் பாடசாலைகளுக்குச் சென்று சமய தர்மக் கல்வியையும் கற்பதற்கும் போதிய சந்தர்ப்பமும் கால அவகாசமும் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் விளையாட்டுக்கள் போன்ற உடல்நல நடவடிக்கைகளிலும் ஈடுபட மாணவர்களுக்கு நேரம் கிடைத்துள்ளது.

தனியார் கல்வி நிலையங்கள் குறிப்பிட்ட இரண்டு நாட்களிலும் மூடப்படுவதனை சமய ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் பலரும் வரவேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



கண்டவாளைப் பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதேச செயலர் உட்பட விருந்தினர்கள் அருகில் இருப்பதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் சிறுவர் ஒருவருக்குப் பிரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கிழக்கில் திவிநெகுமவை ஆதரித்த மு.கா. உறுப்பினர் மீது உடன் நடவடிக்கை தேவை

## அமெரிக்காவில் இருந்து அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்தல்

கிழக்கு மாகாண சபையில் திவிநெகும எனப்படும் வாழ்வெழுச்சிச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது, கட்சியின் உத்தரவை மீறி அதற்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏழு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது அமெரிக்காவில் உள்ள கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இது தொடர்பாகக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விடயத்தைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சட்ட மூலத்துக்கு வாக்களிப்பதற்கு கால அவகாசம் கோருமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியிருந்தது. எனினும் இதனை மீறி, அவர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திவிநெகும சட்டமூலம் தொடர்பாக கட்சிகள், தமக்குள்ளேயே உடன்பாட்டினை எட்டவில்லை என்பதையே இது காட்டுகிறது.

# இன்றைய இராசி பலன் (26.10.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம் : பூரட்டாதி இரவு 10.38 வரை அதன் பின் உத்தரட்டாதி
திதி : துவாதசி இரவு 10.39 வரை. அதன் பின் திரயோதசி
சுபநேரம் : 6.03 - 7.33
இராகுகாலம் : 10.33 - 12.03
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : காரிய சித்தி, கடன் நிவர்த்தி, பெரியோர் மதிப்பு
**இடபம்** : தொழில் விருத்தி, தொழிலாளர் ஒத்துழைப்பு, உறவினர் வருகை
**மிதுனம்** : வியாபார நன்மை, குடும்ப குதூகலம், நண்பர் சேர்க்கை
**கடகம்** : மன அமைதியின்மை, முற்கோபம், அந்நியர் தொல்லை
**சிங்கம்** : பொருள் இலாபம், புத்திரர் நன்மை, வாகன சுகம்
**கன்னி** : சொத்துவாங்க முயற்சி, புதிய நட்பு, உதவி எதிர்பார்ப்பு
**துலாம்** : உத்தியோக நன்மை, வியாபார மத்திமம், பிள்ளைகளால் யோசனை
**விருச்சிகம்** : அலைச்சல், நண்பர் உதவி, தாய்வழி சஞ்சலம்
**தனுசு** : இல்லத்தில் நற்காரியம், சந்தோச செய்தி, உறவினர்களால் நன்மை
**மகரம்** : தொழில் முன்னேற்றம், மன அமைதி, நேர்மாறான செய்கை
**கும்பம்** : தொழில் சஞ்சலம், வீண்செலவு, முயற்சி மேல் பலன்
**மீனம்** : மருத்துவச் செலவு, வீண்வாக்குவாதம், சகோதர சஞ்சலம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சாடுகின்றார் மனோ கணேசன்

வடக்கு கிழக்குத் தமிழ் சமூகத்துக்கு நேரடி தலைமையை கூட்டமைப்பு ஏற்று மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிறது, இந்த மூன்று வருடங்களில் அவர்கள், எமது கட்சியுடன் ஒரு முறைகூட எந்த ஒரு அரசியல் கலந்தாலோசனையும் நடத்தியது கிடையாது நாங்கள் வடக்குக்குச் சென்று அல்லது கொழும்பில் ஏற்பாடு செய்து கலந்து கொள்ளும் பல ஆர்ப்பாட்ட நிகழ்வுகளின் போது, என்னுடன் சம்பிரதாயபூர்வமாக அவர்களில் சிலர் சில நிமிடங்கள் உரையாடியுள்ளார்கள். அவ்வளவுதான் என்று தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசியத் தலைவர் மனோ கணேசன் அதைத் தவிர தனிப்பட்ட முறையில், சிறிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் ஆகிய எம்பீக்கள் என்னுடன் சில அரசியல் உரையாடல்களை நடத்தியுள்ளார்கள்.

கூட்டமைப்புக்கு வெளியே கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் எமது கட்சியுடன் அதிகார பூர்வமாகவே உரையாடல்களை நடத்தியுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், கூட்டமைப்புத் தலைமை எமது கட்சியுடன் எந்த வித அரசியல் உறவையும் வைத்துக் கொள்ளவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. ஐக்கிய தேசிய கட்சியுடனும், முஸ்லிம் காங்கிரசுடனும் கூட்டமைப்புத் தலைவர்கள், கூடிக் கலந்து மணிக்கணக்கில் உரையாடுவது எமக்கு தெரியும். ஆனால், எம்முடன் அத்தகைய உறவை அவர்கள் இதுவரையில் ஏனோ வளர்க்க வில்லை.

இதுதொடர்பில் முயற்சி செய்து, களைத்து நாம் இன்று அதுபற்றி அக்கறையை கைவிட்டு விட்டோம். இதுதான் உண்மை.

# அமைச்சரவை மாற்றத்திற்கு முன் அதிகாரிகள் மட்டத்தில் மாற்றம்?

கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று பரவலாக பேசப்பட்ட போதிலும், அதிகாரிகள் மட்டத்திலேயே விரைவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்தே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக ஜனாதிபதியின் பேச்சாளராக கடமையாற்றி வரும் பந்துல ஜயசேகர இடமாற்றப்பட்டு அவரது வெற்றிடத்துக்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றி வரும் மொஹான் சமரநாயக்க நியமிக்க கூடும் என்று தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கை இதழியல் கல்லூரியின் பணிப்பாளராகக் கடமையாற்றும் அனுராதா கே. ஹேரத் ஜனாதிபதியின் சர்வதேச ஊடக பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் புதிய பேச்சாளர் நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியின் பேச்சாளரான பந்துல ஜயசேகர டெய்லி நியூஸ் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 13ஆவது திருத்தம் ஒரு "நேரக் குண்டு" என்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ச

13ஆம் திருத்தச் சட்டத்தை ஓர் நேரக் குண்டாக கருதப்பட வேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அமுலில் உள்ள 13ம் திருத்தச் சட்டத்தின் மூலமான மாகாண சபை முறைமை நாட்டுக்குப் பாதக நிலைமையை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக இந்த அதிகாரப் பகிர்வானது சமஷ்டி முறைமை ஆட்சிக்கு வழிகோலும என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தை ஓர் நேரக் குண்டாக நோக்குவதாகவும் அது வெடித்தால் நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் மோசமான விளைவுகள் ஏற்படும் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலிகளுக்கு மேலும் உதவிகள்

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் துரித கதியில் வாழ்வாதாரத்தில் முன்னேறும் முகமாக அரசாங்கம் குறைந்து வட்டி வீதத்தில் கடனுதவி வழங்கவுள்ளது. புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களில் 1000 பேருக்கு இச் சலுகை கடனுதவி வழங்கப்படவுள்ளதாகவும், இதனைத் துரித கதியில் முன்னெடுக்கவுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்கு தற்பொது வழங்கிவரும் வாழ்வாதார உதவித் திட்டங்களுக்கு மேலதிகமாக இக் கடனுதவி வழங்கப்படுள்ளது.

இக் கடனுதவியானது சுய வேலைவாய்ப்பு முயற்சிகள், குடிசைத் தொழில்கள், விவசாயத் திட்டங்கள், சிறு பட்டறைகள் மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பயனாளிகள் அதிகப்பட்சம் 250,000 ரூபா வரை பெற்றுக் கொள்ளமுடியும். இவ் உதவி மூலம் தத்தமது குடும்பங்களுக்கும் பாரிய ஒத்துழைப்பு வழங்க முடிவதுடன், அதன்மூலம் தேசிய பொருளாதாரத்திற்கும் உதவ முடியும் எனவும் தெரிவிக்கப்படடுள்ளது.

2009 இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்த நடவடிக்கைகளை தொடர்ந்து, அரசாங்கமானது 12000 முன்னாள்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பது பாரிய பிரச்சனையாகக் காணப்பட்டது. இருப்பினும் அரசாங்கம் அதனை வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.

# யாழ்.பல்கலையில் இன்று 'பயணங்கள்' குறும்பட வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கை மாணவர்களின் ஒத்துழைப்புடன் 'பயணங்கள்' என்ற குறும்பட வெளியீடு இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் இடம் பெறவுள்ளது. எஸ்.அனுராஜின் இயக்கத்தில் உருவான இக் குறும்படம், பயணிகள் பஸ்ஸில் இடம்பெறும் சம்பவங்களை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

பஸ் ஓட்டுநர்கள் பஸ்ஸினைச் செலுத்தும் போது கைத்தொலைபேசியைப் பாவிப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற தொனிப்பொருளை விளங்க வைக்கும் இந்தக் குறும்படம், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

பஸ்ஸில் பயணிகள் சந்திக்கும் இன்னல்கள், நெருக்கடிகள் ஆகியவற்றையும் இக் குறும்படம் வெளிப்படுத்துகிறது.

இந்த நிகழ்வில் யாழ். ப்ல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகவும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

# போலியான கம்பனி: ரூ.208 மில்லியன் நட்டம்

போலியான கம்பனி ஒன்றுடன் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் செய்துகொண்ட மீள் காப்புறுதி காரணமாக அதற்கு 208 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் அறிவித்திருக்கின்றார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் இந்த அறிக்கையை அரசாங்க நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழு (கோப்) கடந்த செவ்வாய்க்கிழமை ஆராய்ந்தது.

இந்த அறிக்கையை மேற்கோள்காட்டிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லகஷ்மன் கிரியல்ல, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தொடர்பாக ட்ரான்ஸ் ஏசிய மெனேஜ்மன்ட் அட்வைஸர் என்ற போலி நிறுவனத்துடன் இந்த மீள் காப்புறுதி ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த கம்பனி போலியானது என்ற தகவல் 2006இல் இணையத்தில் வெளியாகியிருந்தது எனக் கோப் கூறியுள்ளது.

பிரதீப் காரியவசம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த போது இந்த போலி காப்புறுதி செய்யப்பட்டது என ஐ.தே.க. எம்.பி ஹர்ஷ டி சில்வா கூறினார்.



'திவிநெகும' மனைப் பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நேற்று 25ஆம் திகதி காலை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நாற்றுக்கள் நடும் நிகழ்வில் J/87 கிராம அலுவலர், யாழ். பிரதி மேயர், கல்லூரி அதிபர், ஆசிரியர் J/87 சமுர்த்தி அலுவலர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (மீரான்)

# வரணியில் மக்களை நோக்கி துப்பாக்கிச் சூடு: இனந்தெரியா நபரின் அட்டகாசத்தால் பதற்றம்

வரணிப் பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவர் பொதுமக்களை நோக்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கியில் சுட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் வரணி மகாவித்தியாலத்திற்கு அண்மையில் இருந்த பொது மக்களை துப்பாக்கியைக் காட்டி அங்கிருந்து கலைந்து போகுமாறு மிரட்டியுள்ளார்.

இருப்பினும் காரணத்தை அறியாமல் பொது மக்கள் கலைந்து செல்லாதைத் தொடர்ந்து அவர் பொது மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது தெய்வாதீனமாக உயிர் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதன்பின்னர் அங்கிருந்து கலைந்து ஓடிய பொது மக்கள் குறித்த நபரை மடக்கி பிடித்துள்ளனர்.

துப்பாக்கி சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த அப்பகுதி இராணுவத்தினர் குறித்த நபரை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

குறித்த நபர் யார்? ஏன் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார்? என உள்ளிட்ட விபரங்கள் எவையும் உடனடியாக கிடைக்கப் பெறவில்லை.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கும் மக்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்ற பகுதியில் பாரியளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் முடக்கி விடப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களை அடுத்து வரணி முழுவதிலும் கடும் பதற்றமும் பீதியும் நிலவியது.

# அரச ஊழியர்களுக்கு எதிராக 2535 இலஞ்சம், ஊழல் முறைப்பாடுகள்

"இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள 2,535 முறைப்பாடுகளில் பெரும்பான்மையானவை அரசாங்க ஊழியர்களுக்கு எதிரானவையாகவே உள்ளன இது அரசாங்க சேவையில் ஊழல் கணிசமாக அதிகரிப்பதை காட்டுகின்றது" எனவும் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கூறியுள்ளது.

இந்த ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 130 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு அதில் 69 முறைப்பாடுகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகளில் 32 முடிவுக்கு வந்துவிட்டன. இதில் 17 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்.

பிரதேச செயலகங்கள், பொலிஸ் மற்றும் பாடசாலை நிர்வாகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்வதாக ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த ஆணைக்குழு, பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ரி.ஜயவர்தனவுக்கு எதிராக தரக்குறைவான எண்ணெய் இறக்குமதி செய்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திவிநெகும சட்ட மூலத்துக்கு மஹாநாயக்க தேரர்கள் ஆதரவு

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப் படவுள்ள திவிநெகும சட்ட மூலத்துக்கு மஹாநாயக்க தேரர்கள் ஆதரவை வெளியிட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சட்ட மூலம் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று மஹாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத் துடன் இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் மஹாநாயக்க தேர்தல்கள் தெரிவித்திருப்பதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மாஹாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதம் கிடைக்கப்பெற்ற நிலையில், அந்தச் சட்ட மூலத்தைச் சிக்கல் இன்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த சட்ட மூலத்துக்கு எதிராக 12 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் பொருட்களுக்கு ஹலால் சான்றிதழ் வழங்கக்கூடாது

**- தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை**

அமெரிக்காவினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்க கூடாது என தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கப் பொருட்களுக்கு இலங்கையில் ஹலால் சான்றிதழ் வழங்கும் ஒரேயொரு அமைப்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை உள்ளது. இச்சபை யிடமே தேசிய சுதந்திர முன் னணி இந்த கோரிக்கையினை விடுத்துள்ளது.

"அமெரிக்கா உலக முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது. எனவே அமெரிக்காவினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஹலால் சான்றிதழ்களை வாபஸ் பெற வேண்டும்" எனத் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடக பேச்சாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் அல்ஷெய்த் எம்.ஐ.எம்.ரிஸ்வி முப்தியிடம் இந்த எழுத்து மூல வேண்டுகோளை விடுத்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளும் அமெரிக்காவிற்கு இதன் மூலமே எமது எதிர்ப்பினை வெளியிட முடியும்.

எதிர்காலத்தில் அமெரிக்காவின் எந்தவொரு உற்பத்தி பொருளுக்கும் ஹலால் சான்றிதழ் வழங்கக் கூடாது. இதனூடாக முஸ்லிம் சமூகத்தின் எதிர்ப்பையும் ஒற்றுமையையும் காட்ட வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கனேடிய லிபரல் கட்சியின் கொள்கை விளக்கத்தில் ஈழப் பிரச்சினை

கனடாவின். பெரும்பாண்மைக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான வேட்பாளர் ஜஸ்ரின் ரூடோ, ஈழத்தமிழர் விவகாரத்தை தனது கொள்கை விஞ்ஞாபனத்தில் இணைப்பதாகக் கனடிய மனிதவுரிமை மையத்திடம் உறுதியளித்துள்ளார்.

கனடாவின் புகழ்பூத்த பிரதமரான பிய ரூடோவின் மகனான இவரின் தலைமைத்துவப் பதவிக்கான போட்டி கனடாவின் தேசிய ஊடகங்களின் முக்கிய செய்தியாக மாறியுள்ளன. இந்த நிலையில், கனடிய மனிதவுரிமை மையம் இவருடனான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றை நேற்று முன்தினம் தினம் கனடியத் தலைநகரில் மேற்கொண்டது.

சுமார் மூன்றரை மணி நேரம் நீடித்த இச்சந்திப்பில், ஈழத் தமிழர்களின் மனித உரிமை விவகாரத்தில் கனடிய மனித உரிமை மையம் ஆற்றி வரும் பங்களிப்பை பெரிதும் பாராட்டிய ஜஸ்ரின் ரூடோ, கனடிய மனிதவுரிமை மையத்தின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டோடு தான் ஒத்துப் போவதாகவும் தெரிவித்து, மனிதவுரிமை விவகாரத்தை இலங்கை மதித்து நடப்பதற்கு ஏற்றவகையில் செயற்படுவதற்கான வகையில் அதனைத் தனது கொள்கை விஞ்ஞாபனத்தில் இணைப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கனடிய மனிதவுரிமை மையத்தின் பேச்சாளர் றொட்ரொஸ், கனடிய மனிதவுரிமை மையத்தின் ஊடக தொழில்நுட்ப ஆலோசகர் நாதன் தியா, சமூகவள ஆலோசகர் ஸ்ரான் முத்துலிங்கம், மக்கள் தொடர்பாடல் அலுவலர் பிரகாஸ் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கனடிய தேசிய நீரோட்டத்தை சேர்ந்த வேற்று இனத்தவர்களை இயக்குனர் சபை அங்கத்தவர்களாகவும், இயக்குனர் சபை ஆலோசகர்களாகவும் கொண்டுள்ள கனடிய மனிதவுரிமை மையம் கனடாவின் மூன்று பிரதான கட்சிகளுடனும் மேற்கொள்ளும் தொடர்ச்சியான தொடர்பாடல்களின் மூலம் ஈழத்தமிழினத்திற்கு கிடைத்த இன்னொரு வெற்றியிது என மக்கள் தொடர்பாடல் அலுவலர் பிரகாஸ் நந்தகுமார் தெரிவித்தார்.

# 3,400 ரூபாவை கூட பெற முடியாத நிலையில் 18 இலட்சம் குடும்பங்கள்

## அமைச்சர் பஷில் ராஜபக்ஷ

மிகக் குறைந்த மாதாந்தச் செலவினமான ரூபா 3400ஐக் கூட பெற்றுக்கொள்ள முடியாத 18 இலட்சம் குடும்பங்கள் இலங்கையில் உள்ளன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், "நாட்டில் நிலவும் இவ்வாறானதொரு வறுமையை ஒழிப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும்" என்றும் குறிப்பிட்டார்.

# தாயகம் திரும்பியவர்களுக்காக திருமலையில் நடமாடும் சேவை

தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 27ம் மற்றும் 28ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது உள்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால், இந்தியாவுக்கு அகதிகளாக சென்று, நாடு திரும்பியவர்களுள் இலங்கை குடியுரிமை இல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்கவே இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகிறது.

இதற்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் இதற்கு அனுசரனை வழங்குகிறது.

# புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்க மறுக்கும் அவுஸ்திரேலியா

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகப் புகலிடம் தேடிச் செல்லும் தமிழர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் தனது சட்டதிட்டங்களுக்கு அமைய ஏற்க மறுத்து வருகின்றது.

மெல்பேர்னிலிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர் ஒக்டோபர் 31ம் திகதி இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டார்.

அவுஸ்திரேலிய குடியேற்ற அதிகாரிகள் அகதிகளிடத்தில் கடைசி நேரத்தில் பல கேள்விகள் கேட்டு, சட்டதிட்டங்களுக்கு அமைவாக இல்லையெனின் திருப்பி அனுப்பி விடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 40-50 வயது மதிக்கத்தக்க நபரொருவர் தனது சகோதரர் ஒருவர் புலிகள் இயக்கத்தில் போராளியாக இருநது கொல்லப்பட்டதையடுத்து, பாதுகாப்புத் தேடி அவுஸ்திரேலியாவிற்குச் சென்றுள்ளார்.

இவரையும் இறுதி நேரத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கம் நாடு கடத்தியுள்ளது. கடந்த ஜூன் மாதம் தயான் அந்தோனி எனப்படும் தமிழர் ஒருவரையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் வலுக்கட்டாயமாக நாடு கடத்தியிருந்தது.

இவர்களெல்லாம் அவுஸ்திரேலிய குடியேற்ற அதிகாரிகளினால் சட்டதிட்டங்களுக்கு அமைவாக கேட்கப்படும் கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்கவில்லை என தெரிவித்து புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு, உடனடியாக நாடு கடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அகதிகள் தொடர்பாக கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவிற்கு புகலிடம் தேடி வருவோரை, பிரித்தானியாவிற்கு அனுப்பும் திட்டத்தினை கைவிடுமாறு, பிரித்தானிய உயர் நீதிமன்றம் அவுஸ்திரேலியாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

# எண்ணெய் விநியோகத்தில் தடையில்லை

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய பணிகள் இடை நிறுத்தப்பட்டாலும் பிரச்சினைகள் எதுவும் இன்றி அனைத்து வகை எண்ணெய்களையும் விநியோகிக்க முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மசகெண்ணெய் இறக்குமதியில் பிரச்சினை ஏற்பட்டுள்ளபோதும் சுத்திகரிப்புக்கு தேவையான மசகெண்ணெய் கையிருப்பில் உள்ளதாக கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இன்று (26) தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார். பணிகள் இடைநிறுத்தப்படும் காலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் திருத்த வேலைகள் சில இடம்பெறும் என அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை

# வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் பாழ்பட்ட மக்களுக்கு உதவக்கூடியதே

இலங்கையின் அரசியல் யாப்புக்குக் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தமும், உத்தேச திவிநெகும சட்ட மூலமும் பாரிய சர்ச்சைகளை தற்போது கிளப்பியிருக்கின்றன. பதின்மூன்றாவது திருத்தம் ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் சட்டம். 'வாழ்வின் எழுச்சி' என்ற அழகான தமிழ்ப் பிரயோகத்தைக் கொண்ட 'திவிநெகும' என்று சிங்களத்தில் அழைக்கப்படுவது ஒரு சட்டமூலம். சட்டமூலத்திற்கும், அரசியல் யாப்புச் சட்டத்திற்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. வாழ்வின் எழுச்சி என்கின்ற சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கு நிறைவேற்றப்பட்ட பின்னரே அரசியல் யாப்பில் சட்டமாக உள்ளடக்கப்படும். ஆனால் நீதித்துறை இந்த சட்டமூலத்தில் ஏதாவது சிக்கல்கள் இருக்கின்றனவா? இல்லையா? என்று ஆராய்ந்து பார்ப்பதற்கான அதிகாரங்களைக் கொண்டது.

உத்தேச இந்த வாழ்வெழுச்சி சட்டமூலம் நாட்டிலுள்ள ஒன்பது மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இன்னமும் பொறுப்பேற்கவில்லை. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆளுநரே வடமாகாண மக்களின் அபிலாசைகளையும், கருத்துக்களையும் பிரதிபலிக்கும் ஒருவராகப் பார்க்கப்படுகிறார். இலங்கையிலுள்ள ஒன்பது மாகாண சபைகளில் எட்டு மாகாணங்களில் மாகாண சபைகள் இயங்குகின்றன. வடக்கில் மட்டும் அது இல்லை. இருந்தும் இந்த வாழ்வின் எழுச்சி சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அரசியலமைப்பின்படி சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டமாக்கக்கூடிய பெரும்பான்மையும், செல்வாக்கும் அரசாங்கத்துக்கு இருக்கிறது. எனவே யார் எதிர்த்தால் என்ன, எதிர்க்கா விட்டால் என்ன வாழ்வின் எழுச்சி சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுச், சட்டமாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் நிறையவே இருக்கின்றன.

இந்த வாழ்வின் எழுச்சிச் சட்டமூலத்துக்கு ஆதரவாக சமுர்த்தி அதிகார சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடாத்துகின்றார்கள். எதிர்கட்சி அரசியல்வாதிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்துகின்றார்கள். சமுர்த்தி அதிகார சபை, தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபை, சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம், மேல் நாட்டுக் கிராமியப் புனரமைப்புத் திணைக்களம் ஆகியவற்றை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்காகவே இந்த வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் கொண்டுவரப்படுகிறது.

வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் சமுர்த்தி உதவி பெறும் மக்களுக்கு மேலும் நன்மைகளை வழங்கக் கூடியவாறான விதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அது மட்டுமல்ல 1999 ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டபோது சமுர்த்தி ஊழியர்களின் ஓய்வூதியம், தொழில் பாதுகாப்புத் தொடர்பான எந்தவித உத்தரவாதங்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதியம் போன்ற வசதி, வாய்ப்புகளும் கூட காத்திரமான முறையில் முன்வைக்கப்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களை ஒரே குடையின்கீழ் கொண்டு வருவதன் மூலம் வளங்கள் வீண் விரயமாவதை தடுக்க முடியும் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அத்துடன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் இணைந்து கொள்ளும் ஊழியர்கள், அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இதைப் போன்று பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதியம், ஓய்வூதியம் போன்ற வாய்ப்புகளும் வழங்கப்படும் என்றும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. ஐந்து வருடத்திற்கு மேல் சேவையாற்றிய ஊழியர்களுக்கு பணிக்கொடைச் சட்டத்தின்கீழ் அவர்களுக்குரிய மொத்த பணிக்கொடைத் தொகையையும் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் வாழ்வின் எழுச்சிச் சட்டமூலத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் இணைந்து கொள்ளும் ஊழியர்களின் ஓய்வூதியம் வழங்கப்படும்பொழுது, சமுர்த்தி அதிகார சபையில் அவர்கள் இணைந்து கொண்ட காலமும் கணக்கில் எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த உறுதி மொழிகள் உண்மையில் நிறைவேற்றப்படுமானால் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் இணைந்து கொள்ளும் ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. அந்த வகையில் ஊழியர்கள் வாழ்வின் எழுச்சிச் சட்டமூலத்தை ஆதரிப்பதால் மிகுந்த பயனைப் பெறுவார்கள் என்பது உண்மையே.

எனவே ஊழியர்கள் தரப்பில் இருந்து எதிர்ப்புகள் எழப்போவதில்லை. வாழ்வின் எழுச்சிச் சட்டமூலத்தை ஆதரித்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதன் உண்மையான தார்ப்பரியம் இது தான். சமுர்த்தி அதிகார சபை, வாழ்வோடு போராடும் சமூகத்திலுள்ள அடிமட்ட மக்களுக்கு கைகொடுப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. உத்தேச வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் கீழ் தொழில் பயிற்சிகள் சுயதொழில் வாய்ப்புகள், அதற்கான கடன்கள் உட்பட இன்னமும் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது.


மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வாழ்வின் எழுச்சிச் சட்ட மூலம் பறிக்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. அதாவது "ஆமை பிடிப்பான் மல்லாத்துவான், அதை நாம சொன்னாப் பாவம்" என்ற பாணியிலயே எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு உத்திகள் அமைந்திருக்கின்றன. பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலதிகமாக அதிகாரங்களை வழங்குமாறு தமிழ் மக்கள் கோருகிறார்கள். ஏனென்றால் அது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் அதிகாரப் பகிர்வோடு சம்பந்தப்பட்டது. வாழ்வின் எழுச்சி சட்ட மூலம் இந்த நாட்டில் வாழும் அனைத்து இன அடிமட்ட மக்களுக்கும் உதவுவதால் அதுவும் வரவேற்கக் கூடியதே.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# கல்வி: வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்

சரி பிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும், உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துக்கள் சொல்லப்படும் தலைப்புகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் கல்வித்துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகின்றது. இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும், அத்துடன் எந்த வயது வந்தவனும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன்தான் என்று கருதுவதாலும் இருக்கலாம். இன்று கல்வி சர்வ வியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சில வேளைகளில் மற்றக் காரணமாக இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால், கருதப்படுவதைப் போன்று கல்வி சர்வவியாபகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வி சர்வ வியாபகமானதாக மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும், ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வளர்ச்சியுறுத்தக் கூடிய நாடு என்று கருதப்படுவது இலங்கை வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும் எடுத்துக்கொண்டால், இந்த நாட்டின் எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படிச் செய்திருந்தாலும் கூட, அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படையை, ஆகக் குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கிறார்களா? இல்லை. இன்று இந்த நூற்றாண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித் திட்டத்தின் கீழ் இதுதான் நிலையென்றால், கடந்த காலத்தின் நிலைமை என்ன? அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, சனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டும்தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வி இருந்தது. ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள்தான் கல்வி யாருக்கு என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப்பிரபுக்



களுக்காக இருந்தது. முதலாளித்துவ அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்தைய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தது. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற - கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக் கூடியதான பரந்த வெகுஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாகவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்றன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டும்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை அடைவதற்காக ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் ஆகிய சர்வகலாசாலைகளுக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவர். அதேவேளையில் சீனாவில் 'மண்டரீன்ஸ்' எனப்படுபவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர். இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படுகிறது அதேவேளை, கடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஓர் ஆடம்பரப் பொருளாக, ஒரு பெருமை தரும் அணிகலனாக இது கருதப்பட்டதா? இல்லை.

இது அதிகாரத்தின் ஒரு கருவி - அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி. உலக ரீதியான வாக்குரிமை, உலக ரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்தபோதும்கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியேயாகும். இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கங்களால் பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர்களே. இந்தப் படித்தவர்கள்தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதேல்லாம், தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் யார் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயிகளோ அல்லது அரைகுறைப் படிப்பாளிகளோ அல்ல. வேதங்களை ஓதக்கூடிய, அதன் 'புனிதமான' பொருளைக் கூறக்கூடிய, மந்திரங்களைச் சொல்லக்கூடிய படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அது மட்டுமல்ல, தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக்கூடியவர்களாக இருந்தார்கள்! 'ஸ்கூல்' என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவி யாகக் கல்வி இருந்து வந்துள்ளது என்பது காட்டப்படு கின்றது. ஓய்வு என்று பொருள்படுகின்ற 'ஸ்கொலர்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்)

# 2012 இயற்பியலுக்கான நோபல் பரிசு வென்ற இருவரும் சாதித்தது என்ன?

புவியில் மனித இன வாழ்வின் மேம்பாட்டுக்காக தங்களது அறிவுத் திறமைடியால் அரிய கண்டுபிடிப்பைத் தந்தமைக்காக இந்தப் பரிசு. நோபல் பரிசு மெடலின் மேல் எழுதப் பட்டிருப்பதன் தமிழாக்கம் அது. இயற்பியலுக்கான நோபல் பரிசு வென்ற இரு விஞ்ஞானிகளுக்கும் இந்த மெடலுடன் இலங்கை மதிப்பில் சுமார் 14 கோடி ரூபா பரிசு இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**சாதனையின் விளக்கம்:**


உங்களுக்கு ஒரு வினோதமான நண்பர் இருக்கிறார். அவருக்கு நீங்கள் போன் செய்து "நீங்க இப்போ வீட்டில் இருக்கீங்களா, இல்ல வீட்டுக்கு வெளியே தோட்டத்துல இருக்கீங்களா?" என்று கேட்கிறீர்கள். அதற்கு அவர், "இரண்டுலயும்தான்!!" என்கிறார். அதெப்படி ஒருத்தர் ஒரே சமயத்தில் இரண்டு இடத்தில் இருக்க முடியும்?


ஆனால் உங்கள் நண்பர் ஒரு போதும் பொய் சொல்வதில்லை, அதேசமயம் அவர் சொல்வது நடைமுறைக்கு சாத்தியமும் இல்லை, எனவே உங்களுக்கு குழப்பம் வருகிறது. ஆகையால், உண்மையில் என்னதான் நடக்கிறது என்று அறிந்துகொள்ளும் ஆவலில், நேரிலேயே போய்ப் பார்த்துவிடலாம் என்று அவர் வீட்டிற்குச் செல்கிறீர்கள். வீட்டிற்கு வெளியே ஒளிந்திருந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் அவ்வப்போது அவரைக் கவனிக்கிறீர்கள்.

நீங்கள் பார்க்கும் போதெல்லாம் ஒன்று அவர் தோட்டத்திலோ, அல்லது வீட்டிற்குள்ளோ தான் இருக்கிறார். இரண்டு இடத்திலும் ஒரே சமயத்தில் அவர் இருப்பதாக உங்களால் ஒருபோதும் பார்க்க முடியவில்லை. அடுத்து அவரைச் சந்திக்கலாம் என்று நேராக வீட்டிற்க்கே செல்கிறீர்கள். ஒரு அதிசயம், வீட்டிற்கு இரண்டு வாசற்படிகள் உள்ளன. அந்தச் சமயம் அவர் வீட்டினுள்தான் இருக்கிறார். அவரிடம் கேட்கிறீர்கள், "நீங்கள் உள்ளே நுழைய எந்த வாசற்படியைப் பயன்படுத்துகிறீர்கள்?" அதற்கு அவர், "நான் இரண்டிலும் ஒரே சமயத்தில் உள்ளே நுழைகிறேன்!!" என்கிறார்.

அதெப்படி ஒரே சமயத்தில் இரண்டு கதவில் ஒரு ஆள் நுழைய முடியும்? ஒரே வேலை இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி இந்தக் கதவிலும் இன்னொரு பகுதி அந்தக் கதவிலும் நுழைகிறாரோ? உங்களால் அதை நம்ப முடியவில்லை. அவர் எந்த கதவு வழியாக நுழைகிறார் என்பதைக் கண்காணிக்க இரகசியமாக ஒரு கமாராவை அவர் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிடுகிறீர்கள். பின்னர் அதை ஓட்டிப் பார்த்தால் அவர் ஏதாவது ஒரு கதவு வழியாகத்தான் உள்ளே நுழைகிறார், ஒரே சமயத்தில் இரண்டிலும் ஒருபோதும் நுழையவில்லை.

அவர் தனக்கு இருப்பதாக சொல்லும் இந்த அதிசய குணங்களை உங்களால் எதை வைத்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. நேராக அவரிடமே போய், "நீங்கள் சொல்வது எதுவும் நம்பமுடியவில்லை தயவு செய்து என் குழப்பத்தைப் போக்குங்கள்" என்று கேட்டுவிடுகிறீர்கள். அதற்கு அவர், "நீங்கள் என்னை பார்க்காதவரைக்கும் நான் ஒரே சமயத்தில் இரண்டு இடத்திலும் இருப்பேன். ஆனால், என்னை நீங்கள் பார்த்துவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் தான் தோன்றுவேன், உங்களால் இரண்டு இடத்திலும் நான் இருப்பதைப் பார்க்க விடமாட்டேன். நான் இரண்டு கதவிலும் நுழைவது நிஜம்தான், ஆனால் என்னை





ஏமாற்றலாம் என்று நீங்கள் ஆள் வைத்தோ, கமரா வைத்தோ அல்லது வேறெந்த முறையிலுமோ கவனித்தால், நான் அந்த மஜிக்கை காண்பிக்க மாட்டேன், ஏதாவது ஒரு கதவில் தான் நுழைந்து செல்வேன்.

மேலே சொன்னது மாதிரி நமக்கு நண்பர்கள் இல்லாமல் போகலாம், ஆனால் குவாண்டம் உலகில் உள்ள நண்பர்கள் எல்லோருமே இப்படித்தான் விநோதமாக நடந்து கொள்கிறார்கள்.

மேலே சொன்னது இரண்டு உதாரணங்கள், அவங்ககிட்ட இன்னும் பற்பல வினோத செயல்பாடுகள் இருக்கின்றன. அதுசரி அதென்னது குவாண்டம் உலகம்? இந்த எலக்ட்ரான்கள், புரோட்டான்கள், அணுக்கள், ஃபோட்டான்கள் ஒளித் துகள் என்று நமது கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய உலகம் உள்ளது அல்லவா, அதுவே குவாண்டம் உலகமாகும். அந்த உலகம் நாம் காணும் உலகில் இருந்து வேறுபட்டது, விநோதமானது.

அதில் முக்கிய பங்கு வகிப்பது காண்பவராவார் [Observer]. ஒருத்தர் தன்னை காணாதவரை, தன்னுடைய வினோத பண்புகளோடு செயல்படும் குவாண்டம்-அன்பர்கள், பார்க்கிறார் என்றவுடன் தங்களிடமுள்ள விசேஷ, வினோத குணங்களை மறைத்து சாதாரணமாக இருப்பது மாதிரி செயல்பட ஆரம்பித்து விடுகிறார்கள். நூறு வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி, நமது கணினி, தொலைகாட்சி, அணுசக்தி, மின்சாரம் என எல்லா இடங்களிலும் வெற்றிக் கொடி நாட்டிய குவாண்டம் இயக்கவியலின் மிகப் பெரிய குறை இது என்று கூட சொல்லலாம். "குவாண்டம் அன்பர்களின் இந்த விநோதப் பண்புகளை நாம் பார்க்கும் வண்ணம் செய்யவே முடியாதா? வெறும் கனவிலும் கற்பனையிலும் தான் இவற்றை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?" என்ற கேள்விக்கு, "ஆம், முடியும்" என்று சொல்லி 1990களில் நிரூபித்த இரண்டு பேர் 2012 ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசை தட்டிச் சென்றிருக்கிறார்கள், ஒருத்தர் அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் வைன்லேன்ட், இன்னொருத்தர் பிரான்சைச் சேர்ந்த செர்ஜ் ஹரோஷே..

2012 ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற விஞ்ஞானிகள், அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் வைன்லேன்ட் தேசிய தரக் கட்டுப்பாடு நிறுவன ஊழியர், இன்னொருத்தர் பிரான்சைச் சேர்ந்த செர்ஜ் ஹரோஷே கல்லூரிப் பேராசிரியர், இருவருக்கும் வயது 68.

இருவருமே குவாண்டம் ஒளியியல் [Quantum Optics] துறையில் ஆராய்ச்சி செய்பவர்கள். இவர்கள் இருவரும் தனித் தனியே இரண்டு வேறு வழிமுறைகளில் இதை சாதித்துக் காட்டியுள்ளார்கள். டேவிட் வைன்லேன்ட் ஒரு தனி அயனியை [Ion: + அல்லது - மின்னூட்டமுள்ள அணு, இதில் எலக்ட்ரான்கள் எண்ணிக்கை புரோட்டான்களின் எண்ணிக்கையை விட கூடவோ குறைச்சலாகவோ இருக்கும் கட்டிப் போட்டு அதன் மீது ஒளித்துகளை 'ஜஃபோட்டன் "ழவழஸெ செலுத்தி ஆய்வை செய்தார். அவ்வாறு செய்யும் பொது, வேறு எதனுடனும் வினை புரியாமல் தனியே இருக்கும் ஒரு குவாண்டம் துகள் தனது வினோதமான அத்தனை குவாண்டம் பண்புகளையும் இழக்காமல் ஆய்வுக்கு உட்படுகிறது. ஒரு அணுவை ஒரே சமயத்தில் இரண்டு இடத்தில் "பார்க்க" முடியும் என்பது உள்ளிட்ட அத்தனை குவாண்டம் பண்புகளையும் நாம் காண முடியும்.

## கல்வி: வர்க்க சமுதாயத்தில்...

ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக்கூடிய வர்க்கத் தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடமை வர்க்கத்தைத் தவிர வேறு யாருக்கு ஓய்வு நேரம் இருந்தது? சொத்துடைமை வர்க்கம்தான் ஆளும் வர்க்கமாக இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீப காலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்துக்கே உரியது. அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதுடன், மற்றைய வர்க்கங்களுக்கும் கொடுக்கப்பட் டாலும், வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள், தத்துவம் ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன்

நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை, சர்வ வியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலக நீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படு கின்றது. ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடக்கி, ஒடுக்கி, சுரண்டப்படுகின்ற மக்கள், வெகுஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப் படையை அறிந்து கொள்வது அவசியம். இதன்மூலம்தான் மக்களின் சகல பகுதியினருக் கும் கல்வி வசதியை விஸ்தரிப் பது வர்க்க அடக்குமுறையிலி ருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழி நடாத்தப்படமலிருக்க முடியும். இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக் கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது.

(இக்கட்டுரையை எழுதிய மு.கார்த்திகேசன் இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராவார். அத்துடன் சிறந்த கல்விச் சிந்தனையாளரான அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் பணி புரிந்ததுடன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பனவற்றின் அதிபராகவும் பணியாற்றியவர். "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட அவர் 1977 செப்ரெம்பர் 10ம் திகதி காலமானார்.

## குமுதம்...

### தமிழ் செக்ஸ் வார இதழ் ..!

குமுதம் ....ஜனரஞ்சகப் பத்திரிகை என்ற பெயரில் அப்பட்டமான ஒரு செக்ஸ் புத்தகமாக மாறி வருகிறது....விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக தனது தரத்தைக் குறைத்து கொண்டு வரு கிறது குமுதம்....

தமிழ் வார இதழ்கள் என்றாலே எல்லாருக்கும் முதலில் நினைவுக்கு வருவது விகடனும் குமுதமும்தான்....அதில் விகடனின் பாணியே வேறு.... ஆனால் குமுதம்? அதன் விற்பனை டல்லடிக்கும் போதெல்லாம் நடிகனை பற்றியோ நடிகையை பற்றியோ கதை எனும் பெயரில் ஆபாசமாக எழு துவது குமுதத்துக்கு கை வந்த கலை.

முன்பு இப்படித்தான் நடிகர்களின் அந்தரங்க விசயங்கள் என்று தலைப்புப் போட்டு எழுதினார்கள்....இப்போது ஒற்றைகூத்தன் எனும் பெயரில் 'ஆட்டமா தேரோட்டமா' என்ற தலைப்பில் ஒரு கதை எழுதப்பட்டு வருகிறது ...அதில் ஒரு நடிகையை பற்றி எழுதி வருகிறார்கள்... அதில் இது உண்மை கதை அல்ல என தலைப்பு வேறு...




சரி ..எழுதுவதுதான் எழுதுகிறார்கள்..... நாகரிக மாக எழுதலாம் அல்லவா? அதனைப் பச்சை பச்சையான கெட்ட வார்த்தைகளால் எழுதி பத்திரிகை தர்மத்துக்கே நித்யானந்தா போல சிரித்துக் கொண்டே வேட்டு வைக்கிறார்கள்..

அக்கதையில் அச்சில் ஏற்ற முடியாத கெட்ட வார்த்தைகளை நாகரிகமாக **போட்டு எழுது வாங்களாம்... அதாவது சில ** வார்த்தைகள்... அச்சில் ஏற்ற முடியாத வார்த்தைகள் என சொல்லி விட்டு நாமே அதை எழுதக் கூடாது என்பதால் எழுதாமல் விட்டுவிடுகிறேன்....அதைப் படிப்பவர்களுக்கும் இதைப் படிப்பவர்களுக்கும் அது நன்கு புரியும்....

பத்திரிகைகள் எதைப்பற்றி வேணும்னாலும் எழு தலாம்...அது அவர்களின் எழுத்து உரிமை... ஆனால் பச்சை பச்சையான கெட்ட வார்த்தைகளை எழுதுவது குமுதம் போன்ற பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் படிக்கும் ஒரு வார இதழுக்கு அழகாகுமா?

நம்பர் 1 தமிழ் வார இதழ் என போட்டுக் கொள்வது இது போன்ற செக்ஸ் கதைகளை மட்டும் எழுதுவதற்கா?

அதற்காக குமுதம் நல்ல விசயங்களை எழுதிக்கொண்டுதானே இருக்கு... இதெல்லாம் ஒரு விஷயமா, என யாரும் நினைத்தால்.... அதற்கு பதில் கீழே.

ஒரு பத்திரிகை விற்க வேண்டும் என்பதற்காக குமுதம் போன்ற பத்திரிக்கைகள் செக்ஸ் கதை எழுதுவதும், ஆயிரம் ரூபாய் மதிப்பில் செருப்பும், பல்லாயிரம் ரூபா பெறுமதியான கண்ணாடியும் போட்டுக்கொண்டு ஒருவன் நிர்வாணமாய் தெருவில் நடப்பதும் ஒன்றுதான்.!



# தமிழ் இலக்கியத்தில் சில அதிசயச் செய்திகள்

புறநானூற்றுப் பாடல் ஒன்று. காலையில் பாலில் அரிசிப் பொரியைச் சேர்த்து உண்பதாகக் குறிப்பிடுகிறது. இன்று பிரிட்டனிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் மக்கள் காலை உணவில் "கார்ன் ப்ளேக்ஸ்" (மக்காச் சோளம்), "ரைஸ் கிரிஸ்பிஸ்" (அரிசிப் பொறி) ஆகியவற்றைச் சாப்பிடுவதைக் காண்கிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் கண்டு பிடித்த காலைத் தானிய உணவு (break-fast cereal) உலகெங்கிலும் பரவியதெப்படி? இதுவும் ஆராய்ச்சிக்குரிய பொருள்!



சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான கலித்தொகையில் ஒரு அதிசயச் செய்தி வருகிறது. பாலை பாடிய பெருங்கடுங்கோ இயற்றிய பாடலில், ஒரு மரத்தின் கீழ் பொய் சொல்பவன் நின்றால் அந்த மரம் வாடி விடும் என்று கூறுகிறார். தற்காலத்தில் அமெரிக்காவில் பொய் கண்டு பிடிக்கும் கருவியைப் (Lie detector) பயன்படுத்துகின்றனர். பொய் சொல்பவனின் நாடி, இருதயம், மூளை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கிட்டு அவன் பொய்யன் என்பதைக் கண்டு பிடிக்கின்றனர். ஆனால் தமிழனோ இதற்கு ஒரு படி மேலாகச் சென்று ஒரு தாவரம் கூடப் பொய்யைக் கண்டு பிடிக்க உதவும் என்கிறான். ஆனால் அத்தகைய மரம் எது என்று தெரியவில்லை. வள்ளுவர் கூட மோப்பக் குழையும் அனிச்சம் என்று அனிச்சம் பூ பற்றிக் கூறுகிறார். அதாவது முகர்ந்து பார்த்தாலேயே வாடி விடுமாம் அனிச்சம். தாவரங்களுக்கும் உயிருண்டு, உணர்ச்சியுண்டு என்பதை 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே கண்டு பிடித்தவன் தமிழன், இன்னொரு சங்கப் பாடலில் ஒரு செடியை நெய்யும் பாலும் ஊற்றி, பெற்ற மகளைப் போல அன்பாக வளர்த்த ஒரு பெண் பற்றி ஒரு கவிஞன் பாடுகிறான்.

விண் வெளியில் ஏராளமான கிரகங்கள் உள்ளன. அவைகளில் பூமியைப் போலக் காற்று மண்டலம் இருந்தால் தான் உயிரினங்கள் வாழ முடியும். பூமிக்கு மேலே - விண் வெளியில் - வளி (காற்று) மண்டலம் இல்லை. இதைப் பழந் தமிழர் அறிந்திருந்தனர் போலும்! வெள்ளக்குடி நாகனார் என்ற புறநானூற்றுப் புலவர் (புறம் 35) வளியிட வழங்கா வானம் என்று குறிப்பிடுகிறார். குறுங்கோழியூர்க் கிழார் (புறம் 20) "வறி நிலை இல் காயம்" என்றும் புலவர் மார்க்கண்டேயனார் (புறம் 365) வளியிட வழங்கா வழக்கு அரு நீத்தம்" என்றும் வள்ளுவன் (குறள் 245) "வளி வழங்கு பூமி" என்றும் இதையே குறிப்பிடுகின்றனர்.

ஒலியும் ஒளியும் (Sound and light) மின் காந்தப் பட்டையின் (Electro Magnetic spectrum) ஒரே அங்கம் என்று தற்கால அறிவியல் கூறுகிறது. இதை அறிந்து தானோ என்னவோ தமிழ் மொழியில் மட்டும் ஒலி - ஒளி என்று ஏறத்தாழ ஒரே சப்தமுள்ள இரண்டு சொற்கள் இதைக் குறிக்கப் பயன் படுத்தப் படுகின்றன. சமஸ்கிருதம், ஆங்கிலம் உட்பட எல்லா மொழிகளிலும் இதற்கு வெவ்வேறு சப்தமுள்ள சொற்கள் உள்ளன.

தற்காலப் பறவையியல் அறிஞர்கள் பறவைகள் குடியேற்றம் (Bird migration) பற்றி விரிவாக ஆராய்ந்து வருகின்றனர். சில வகை பறவைகள் 12,000 மைல் பறந்து வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை சென்று திரும்புகின்றன. இதைக் கண்டு பிடிக்க நவீன உத்திகளைக் (Electronic Tagging or Ringing) கையாளுகின்றனர். பறவைகளின் காலில் தேதியும்,

# நாட்டுப்புற இலக்கியமும் உளவியல் தாக்கமும்

இலக்கியங்களை ஏட்டு இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் என இருவகைப்படுத்தலாம். நாட்டுப்புற இலக்கியங்கள் கற்றறிந்தச் சான்றோர்களால் படைக்கப்படவில்லை. எனினும், பல இலக்கியக்கூறுகள் இவற்றில் புதைந்து கிடக்கின்றன.

நகருக்குப் புறம்பாகவுள்ள நாட்டுப்புற மக்கள் பாடிய நாட்டுப்புறப் பாடல்கள், இன்றும் ஏட்டு இலக்கியங்களில் இடம் பெறும் அளவிற்குப் பெருமை பெற்று விளங்குகின்றன.

**நாட்டுப்புற இலக்கியம்:**

இலக்கியத்தை இலக்கு ஃ இயம் எனப் பிரிக்கின்றபோது, வாழ்க்கையின் குறிக்கோள், நோக்கத்தை இயம்புவது, கூறுவது, ஆராய்வது எனப் பொருள்படும். எனவே, "நாட்டுப்புற இலக்கியம்" என்பது நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையை ஆராய்வது எனக் கொள்ளலாம்.

நாட்டுப்புற இலக்கியத்தை நாட்டுப்புறப் பாடல், நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல், விடுகதை, பழமொழி என வகைப்படுத்துவர். நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறாக நாட்டுப்புறப் பாடல்கள் விளங்குகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் சமூகத்தின் கொடுமைகளை, ஏற்றத்தாழ்வுகளை, உள்ளதை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டும் கருவியாகும். நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கண வரம்பிற்குள் பெரிதும் கட்டுப்படாமல் காட்டாற்று வெள்ளம் போல் தங்குதடையின்றி பாய்ந்து செல்லும் தன்மைப் படைத்தவை.

**உளவியல்:**

இன்றைய அறிவியல் உலகில் உளவியல்துறை தனித்து இயங்கும் உன்னதத்துறையாக வளர்ந்து வருகின்றது. உளவியல் முதலில் தத்துவக் கொள்கையாக இருந்தது. பின்னர் உள்மனத்தில் ஏற்படும் நிகழ்வுகள், செயல்கள், நடத்தையைப்பற்றி ஆராயும் போக்கு அதில் வளர்ந்து வருகின்றது.

உளவியல் எனப்படுவது உள்ளத்தின் இயல்புகளைக் கூறுவது. உளஃஇயல் எனப் பிரித்தால், உள்ளத்தின் இயல்புகளைக் கூறுவது (அல்லது) ஆராய்வது எனப் பொருள்படும்.

உளவியல் என்பது மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்குவது என்றும் "Psychology is concerned with understanding the mind and the behaviour of man" என்ற கூற்றினை நோக்கும்போது உளவியல் மனித உள்ளத்தையும், நடத்தையையும் ஆராயும் துறை ஆகும்.

**உளவியல் பிரிவுகள்:**


பொது உளவியல், குழந்தை உளவியல், சமூக உளவியல், உடற்கூற்று உளவியல், பிறழ்ந்த உளவியல், கல்வி உளவியல், விலங்கு உளவியல் எனப் பல பிரிவுகள் உள்ளன.

**நாட்டுப்புற இலக்கியமும் உளவியல் தாக்கமும்:-**

உளவியல் துறை இன்றும் அறிவியல் உலகில் தனித்துறையாக வளர்ந்து வருகின்றது. உளவியல் துறை மற்ற ஆய்வுத்துறைகளோடு இணைந்து ஆய்வு செய்யும் போக்கும் காணப்படுகின்றது. அவ்வகையில் நாட்டுப்புற இலக்கியமும் ஒன்றாகும்.

**பொது உளவியல்:**

மனவாழ்க்கை என்பது மனத்தில் தோன்றும் உணர்ச்சிகள், கற்பனைத்திறன், எண்ணங்கள் முதலியவற்றின் செயற்பாடுகளை விரிப்பது "பொது உளவியல்" எனப்படும்.



ஊர்ப் பெயரும் பொறித்த ஒரு அலுமினிய வளையத்தையோ, மின்னணுக் கருவியையோ மாட்டி விடுவார்கள். வேறொரு நாட்டில் இத்தகைய பறவைகளைக் கண்டால் அந்த வளையத்திலுள்ள செய்திகளையும், அதைத் தாங்கள் பார்த்த தேதி, இடத்தின் பெயரையும் அந்த நாட்டுப் பறவையியல் அறிஞர்கள் உலக முழுவதுமுள்ள பறவையியல் ஆய்வுக் கூடங்களுக்கு அறிவிப்பார்கள். ஆனால் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே தென் குமரியிலிருந்து வட இமயத்திற்கு அன்னப் பறவைகள் பறந்து செல்வதையும் இமய மலையிலிருந்து அவை தமிழ் நாட்டுக்கு வருவதையும் தமிழன் அறிந்து வந்துள்ளான். காலில் வளையம் மாட்டாமலும், மின்னணுக் கருவியைப் பயன் படுத்தாமலும் அன்னப் பறவையின் 3,000 மைல் பயணத்தை அறிந்து பாடியுள்ளான் தமிழன்.

(புறம் 67 - பிசிராந்தையார் நற்றிணை - 70 வெள்ளி வீதியார், நற்றிணை 356 - பாணர், அகம் 120 - நக்கீரனார், அகம் 273 - ஔவையார் ஆகிய பாடல்களைக் காண்க).

பிராணிகளுக்கு அறிவு உண்டு என்றும் மனிதர்களைப் போலவே அவைகளுக்கு உணர்வுகள் உண்டு என்றும் தற்காலத்தில் ஏராளமான கட்டுரைகளும் புத்தகங்களும் வெளியாகி வருகின்றன. குரங்குகள் மனிதர்களைப் போலவே கருவிகளைப் பயன்படுத்துகின்றன என்று பிரபல வார இதழான "நியூஸ் வீக்"கில் அண்மைக் காலத்தில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. ஆனால் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதி விட்டான் தமிழன். குரங்குகள் முரசு அடிப்பதை முட மோசியார் (புறம் 128) என்பவரும், குரங்குகள் குச்சிகளைப் பயன்படுத்துவதைக் கபிலர் என்பவரும் குறிப்பிடுகின்றனர். ஆடுகளைக் கொட்டகையில் அடைப்பதற்கு ஆட்டிடையர்கள் நாய்களைப் பயன் படுத்தும் காட்சியை பிபிசி டெலிவிஷனில் பலரும் பார்த்திருப்பீர்கள். தொலைவில் நின்றவாறே வாயின் மூலம் விசில் அடித்து ஆடுகளை அழைக்கும் காட்சியைக் கபிலர் (அகம் 318) பாடுகிறார். பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகையிட்ட காலத்தில் கிளிகளின் மூலம் நெல் முதலிய தானியங்களைக் கொணர்ந்து பல மாதங்கள் உயிர் வாழ்ந்தனர் என்று (Survival techniques using animals at war times) ஔவையாரும் (அகம் 303) நக்கீரரும் (அகம் 78) குறிப்பிடுகின்றனர். கிளிகளை இவ்வாறு பயன் படுத்தியவர் கபிலர் என்றும் கூறுகின்றனர்.

**குரங்குகள் முரசு அடிப்பதை முட மோசியார் (புறம் 128) என்பவரும், குரங்குகள் குச்சிகளைப் பயன்படுத்துவதைக் கபிலர் என்பவரும் குறிப்பிடுகின்றனர். ஆடுகளைக் கொட்டகையில் அடைப்பதற்கு ஆட்டிடையர்கள் நாய்களைப் பயன் படுத்தும் காட்சியை பிபிசி டெலிவிகூஷனில் பலரும் பார்த்திருப்பீர்கள். தொலைவில் நின்றவாறே வாயின் மூலம் விசில் அடித்து ஆடுகளை அழைக்கும் காட்சியைக் கபிலர் (அகம் 318) பாடுகிறார். பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகையிட்ட காலத்தில் கிளிகளின் மூலம் நெல் முதலிய தானியங்களைக் கொணர்ந்து பல மாதங்கள் உயிர் வாழ்ந்தனர்**



பருவக் காற்றின் பயனை ஹிப்பாலஸ் என்ற கிரேக்கர் தான் முதல் முதலில் கண்டு பிடித்தார் என்றும் இது கி.பி. முதல் நூற்றாண்டில் நிகழ்ந்தது என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். இது சரியல்ல என்றே தோன்றுகிறது. ஏனெனில் கரிகால் பெரு வளத்தானைப் பாடிய வெண்ணிக் குயத்தியார் (புறம் 66) கரிகால் வளவனின் முன்னோர்கள் காற்றின் பயனை அறிந்து நாவாய் (கப்பல்) ஓட்டியதைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

நறி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உருவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால் வளவ. (புறம் 66)

மாங்குடி மருதனும் (புறம் 26), மருதன் இளநகனும் (கலி 82), வளி வழங்கு கலம் (பாய் மரக் கப்பல்), பருவக் காற்று ஆகியன பற்றிப் பாடுகின்றனர்.

கொட்டகையில் அடைப்பதற்கு ஆட்டிடையர்கள் நாய்களைப் பயன் படுத்தும் காட்சியை பிபிசி டெலிவி'னில் பலரும் பார்த்திருப்பீர்கள். தொலைவில் நின்றவாறே வாயின் மூலம் விசில் அடித்து ஆடுகளை அழைக்கும் காட்சியைக் கபிலர் (அகம் 318) பாடுகிறார். பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகையிட்ட காலத்தில் கிளிகளின் மூலம் நெல் முதலிய தானியங்களைக் கொணர்ந்து பல மாதங்கள் உயிர் வாழ்ந்தனர் என்று (Survival techniques using animals at war times) ஔவையாரும் (அகம் 303) நக்கீரரும் (அகம் 78) குறிப்பிடுகின்றனர். கிளிகளை இவ்வாறு பயன் படுத்தியவர் கபிலர் என்றும் கூறுகின்றனர்.

பருவக் காற்றின் பயனை ஹிப்பாலஸ் என்ற கிரேக்கர் தான் முதல் முதலில் கண்டு பிடித்தார் என்றும் இது கி.பி. முதல் நூற்றாண்டில் நிகழ்ந்தது என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். இது சரியல்ல என்றே தோன்றுகிறது. ஏனெனில் கரிகால் பெரு வளத்தானைப் பாடிய வெண்ணிக் குயத்தியார் (புறம் 66) கரிகால் வளவனின் முன்னோர்கள் காற்றின் பயனை அறிந்து நாவாய் (கப்பல்) ஓட்டியதைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

நறி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உருவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால் வளவ. (புறம் 66)

மாங்குடி மருதனும் (புறம் 26), மருதன் இளநகனும் (கலி 82), வளி வழங்கு கலம் (பாய் மரக் கப்பல்), பருவக் காற்று ஆகியன பற்றிப் பாடுகின்றனர்.

ச.சாமிநாதன்

---

குழந்தையில்லாத தாய் பல தவங்களை மேற்கொள் கின்றார். குழந்தைச் செல்வம் இல்லாததால் ஏற்பட்ட மனக்கவலை நீங்க இறைபக்தியுடன் தொடர்பு கொள் கின்ற நிலை ஏற்படுகின்றது. அதற்குத் தீர்வு ஏற்படும் எனவும் நம்புகின்றாள். இதனை

வெள்ளித் தலமுழுகி வினாயகருக்கு
வெகுநாள் - தவமிருந்தேன்" என்றும்
பத்தெட்டுக்காலம் பகவானை சேவித்தோம்
ஈரெழுகாலம் ஈஸ்வரனை தியானித்தோம்"

என்பதன் மூலம், பல தெய்வங்களிடம் சென்று, தன் மனக்கவலை தீர்க்கும்படி நோன்பு நோற்கின்றாள். அதன் பயனாகக் குழந்தைப்பேறு கிட்டும் எனவும் நம்புகின்றாள்.

குழந்தை உளவியல்:-

குழந்தையின் ஒவ்வொரு பருவ வளர்ச்சிக்கு ஏற்ப அமையும் மன இயல்புகளை இக்குழந்தை உளவியல் விளக்குகின்றது.

தன் மகன் விருந்தளிக்கும் பண்புள்ளவனாகத் திகழவேண்டும் எனப் பிஞ்சு உள்ளத்திலேயே, அக்குழந்தைக்கு நற்பண்புகள் வளர வித்திடுகின்றாள் தாய்.

ஆடி அமாவாசையிலே - உங்களய்யர்
ஆயிரம் பேர்க்கு அன்னமிட்டு
ஆசையுடன்
பெற்றெடுத்த
எனப்பாடுகின்றார்.



குழந்தைப் பருவத்தில் கற்றுத்தரப்படும் பழக்கவழக்கங்களும், நற்பண்புகளும் குழந்தையின் வாழ்க்கை முழுவதுமே பெரிதும் உதவுவனவாக அமைந்துவிடுகின்றன என பெசன்ட் கிரீப்பர் ராஜ் கூறுவதை நோக்கும் போது, தன் குழந்தையின் நடத்தையில் பழி வரக்கூடாது என்பதற்காக, இளம் பருவத்திலேயே நற்பண்புகளைத் தாலாட்டின் மூலம் கற்றுத்தருகின்றாள்.

**ஒருவனுக்கு மறுமணத்தை வலியுறுத்திய போதும், அவன் அதை மறுத்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணப்போக்குடன் வாழ்வதை வில்லுப்பாட்டில் காணலாம்.**
**நூறு பெண்கள் கட்டினாலும் - உன்**
**நோக்கம் போலக்கிட்டு மோடி**
**கோடி பெண்கள் கட்டினாலும் - உன்**
**குணம் போலக்கிட்டு மோடி**

**சமூக உளவியள்:**

தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் உள்ள தொடர்பு, சமூகத்தில் மனிதனின் செயற்பாடுகள், நடத்தைகள், சமூகக் கூட்டுணர்வால் இணையும் போது ஏற்படும் உளப்போக்கினை ஆராய்வது சமூக உளவியல் எனப்படும்.

நாட்டுப்புறக் கலைகள் ஏதேனும் நற்பண்புகளை, ஒழுக்கத்தை, நீதிகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஒருவனுக்கு மறுமணத்தை வலியுறுத்திய போதும், அவன் அதை மறுத்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணப்போக்குடன் வாழ்வதை வில்லுப்பாட்டில் காணலாம்.

நூறு பெண்கள் கட்டினாலும் - உன்
நோக்கம் போலக்கிட்டு மோடி
கோடி பெண்கள் கட்டினாலும் - உன்
குணம் போலக்கிட்டு மோடி

என்ற வில்லுப்பாட்டின் மூலம் வாழ்க்கைக்கு வழிகாட்டவும், சமூதாயச் சிர்கேடுகளைக் களையவும் உறுதுணையாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.வில்லுப்பாட்டுக் கதைகள், மக்கள் உள்ளத்திலே கடவுட்பற்றையும், கலையுணர்வையும் சமூகச் சிர்திருத்தம் பற்றிய எண்ணங்களையும் வளர்க்கப் பயன்பட்டன.என்பதனை நோக்கும்போது கலைகள், சமூதாயச் சிர்கேடுகளை எடுத்துக் கூறுவதற்கும், ஒழுங்குப்படுத்துவதற்கும் பயன்படுகின்றன எனலாம்.

**வளர்ச்சிசார் உளவியல்:**

மனிதன் பருவ வளர்ச்சி, மனவளர்ச்சி, இவற்றில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வது, வளர்ச்சி சார் உளவ-ியல் எனப்படும்.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் கல்வியறிவும் ஒன்றாகும். எண்களுடன் எளிய சொற்களைச் சேர்ந்துப் பாடுகின்றபோது, குழந்தைகளின் மனத்தில் எளிதில் பதிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

என்றும்
ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு
கையில் பிடிக்கிற செண்டு
ரெண்டு ரெண்டு நாலு
பசு கறக்கிற பாலு
நாலும் ஒண்ணும் அஞ்சு
மெத்தைக்குப் போடுவது பஞ்சு
அஞ்சும் ஒன்றும் ஆறு
ரோட்லே போறது காரு

என்ற குழந்தைப் பாடல்களில் ரெண்டு - செண்டு, நாலு - பாலு, அஞ்சு - பஞ்சு, ஆறு - காரு, போன்ற சொற்களில் ஏற்படும், இசையும் ஓசையும் தான் முக்கியம். இதனால் குழந்தைகளுக்கு அறிவும், மனவளர்ச்சியும் ஏற்படுகின்றன. இதன் மூலம் நாட்டுப்புற இலக்கியத்தில் உளவியல் கூறுகள் பரிமளிக்கின்ற நிலையினை ஓரளவு காணமுடிகின்றது. சான்றாகக் குழந்தைப் பாடல்களில் தாய் குழந்தையின் மனவளர்ச்சி, அறிவுவளர்ச்சி, கல்வி யில் மாற்றம், வாழ்க்கையில் அறிவுத்திறன் உடல் கூற்றுத் திறன் அனைத்தும் உளவியல் போக்கோடு அமைந்தி ருப்பது ஓரளவு அறியலாம்.

- இரா. சாந்தி

# கல்வித் தரத்தை உயர்த்திக்கொள்ள வழிகாணப்படுவது மிக அவசியம்

## மாவை.எம்.பி.

கல்விச் சமூகத்திற்கு ஏற்படும் நெருக்கடி முழுச் சமூகத்தையும் பின்னடைவை நோக்கி இட்டுச் செல்லும். எனவே எமது உயர்ந்த கல்வி ஒழுக்கத்தை மேம்படுத்த நாம் வழிகாண வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறினார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய முல்லைத்தீவு துணுக்காய் வலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது, பாலிநகர் லோகநாதன் மற்றும் அதே ஊரைச்சேர்ந்த புலம்பெயர் உறவான இளையராஜா ஆகியோரின் அனுசரணையுடன், வன்னி பா. உறுப்பினர் வினோநோதராதலிங்கத்தின் வழிகாட்டலுடன் இடம்பெற்றது.

இதில் விருந்தினர்களாக பா. உறுப்பினரும் த.தே.கூட்டமைப்பின் பொதுசெயலாளருமான மாவை.சேனாதிராஜா, பா.உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் பாண்டியன்குளம் பிரதேச சபையின் தலைவர் தனிநாயகம், துணுக்காய் பிரதேச சபையின் தலைவர் ராசரத்தினம் பிரதச சபைகளின் செயலாளர்கள், உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சித்தி எய்திய மாணவர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்களாலும் பெற்றோர்கள், நலன்விரும்பிகளாலும் அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து, பாண்டியன்குளம் பிரதேச சபை உபதவிசாளர் செந்தூரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பா.உறுப்பினர் விநோநோதராதலிங்கம், பா.உறுப்பினர் ச.சிறீதரன் ஆகியோருடன் பிரமுகர்கள் பலரும் கருத்துக்களையும் வாழ்த்துகளையும் வழங்கினர்.

இங்கு பா.உறுப்பினர் மாவை. சேனாதிராசா சிறப்புரையாற்றினார். இதன்போது,

மிகச்சிறந்த அறிவு பாரம்பரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் உரியவர்களாக எமது இனம் வாழ்ந்து இருக்கின்றது. பாரதி எனும் மகாகவி நமது சமுகம் தொடர்பாக அளப்பரிய கனவுகள் கண்டான். காணி நிலம்வேண்டுமென அவன் கவித்துவமியற்றினான்.

ஆனால் இன்று நாம் நலிவுற்ற சமுதாயமாக ஆக்கப்பட்டுள்ளோம். பல்வேறு நெருக்கடிகள் எமது நிலத்துக்கும் கல்விக்கும் பொருளாதாரத்துக்கும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. எமது சிறந்த ஒழுக்கம் சிதைக்கப்பட்டு பலமிழந்த சமுகமாக மாற்றப்பட்டுள்ளது.

கல்வியை பொறுத்தளவில் கல்விக்கூடங்கள் சுதந்திரங்களை இழந்துள்ளன. இதன் மூலம் எமது இயல்பு சிதைக்கப்படுகின்றது.

எமது வழிவந்த ஒழுக்க நிலையை நாம் பேணவேண்டும். அதன் மூலம்தான் எமது கல்வியும் மீண்டும். உச்ச நிலைக்கு செல்லும். சென்ற ஆண்டை விட சித்தியெய்தியவர்களின் தொகையில் வீழ்ச்சி என்றால் காரணம் தேடிபார்க்க வேண்டும்.

இப்பொழுது போரில்லை ஆனால் போருக்கு நிகரான நெருக்குவாரங்கள் இருக்கின்றன. மிக மோசமான அடக்குறை நிகழ்கின்றது. எனவே இதை ஆட்சியாளர்கள் உணர்கிற பட்சத்தில்தான் எமது சமுகம் பல்வேறு துறைகளில் முன்னேறமுடியும்.

கல்விச் சமுகத்தில் இருக்கக் கூடிய நெருக்குவாரம் முழு சமுகத்தையும் பின்னடைவை நோக்கி இட்டுச்செல்லும். எனவே எமது உயர்ந்த கல்வி ஒழுகத்தை மேம்படுத்த வழிகளை நாம் காணவேண்டிய அதற்காக போராட வேண்டிய சூழலுக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்றார்.

## அரச பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்

ஹஜ் பெருநாள் எதிர்வரும் நாளை 27ஆம் திகதி சனிக் கிழமை கொண்டாடப்படுவதால இன்று 26ஆம் திகதி அனைத்து அரச பாடசாலைகளும் வழமை போன்று இயங்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 26ஆம் திகதி அறிவிக்கப்பட்ட பொது விடுமுறை 27ஆம் திகதிக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் அசௌகரியம்

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது மன்னார் தனியார் பேருந்து தரிப்பிட பகுதியில் தேங்குவதனால் தரிப்பிடத்தில் நிற்கும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்.

## வயோதிபர்களுக்கான சிகிச்சை முறைகள்

வயோதிப நோயாளர்களுக்கான சிகிச்சை முறைகளை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய சனத் தொகையில் 8 - 10 வீதமானவர்கள் வயோதிபர்கள்.

2025ஆம் ஆண்டளவில் இந்த வீதம் 22 ஆக உயர்வடையும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்காசியாவிலேயே அதிக முதியவர்களைக் கொண்டுள்ள நாடு இலங்கை ஆகும்.

நாட்டில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் இதற்கான காரணம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் முதியவர் சனத் தொகைக்கு ஏற்ப அவர்களுக்கான விசேட சுகாதார சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி முதியவர்களுக்காக தனிப்பட்ட வைத்தியசாலைகளை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

## மட்டக்களப்பிலுள்ள ஒல்லாந்தர் கோட்டையை பாதுகாப்பது தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஆய்வு

2011ஆம் ஆண்டிற்கான கலாசார பேணுகைக்கான தூதுவர் நிதியத்தின் மூலமாக வழங்கப்பட்ட 52000 அமெரிக்க டொலர்கள் நிதியுதவியின் கீழ் பாதுகாக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

மட்டக்களப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒல்லாந்தர் கோட்டையை தூதுவர் மிசேல் ஜே.சிஸன் தனது மட்டு. விஜயத்தின் போது பார்வையிட்டார்.

பிரதேசத்தின் இன்றியமையாத் தேவையாக இருந்த கலாசார பாதுகாப்புப் பணியானது இலங்கையில் 26 ஆண்டுகால யுத்தத்தாலும் 2004ஆம் ஆண்டு சுனாமியின் பாதிப்புக்களாலும் நீண்டகாலமாக தடைப்பட்டிருந்தது. ஆனாலும் கலாசார பேணுகைக்கான தூதுவர் நிதியத்தின் நன்கொடையின் துணையுடன் உள்ளூர் பங்காளர்கள் கலாசாரத்தை பராமரிப்பு மூலமாக பாரிய பொருளாதார அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கு துணைபுரியும் அதே வேளை இந்த தேசிய சொத்தை மீட்டெடுக்கும் பணிகளை ஆரம்பித்தனர்.

இந்த திட்டமானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்குமாகாணத்தில் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் முக்கிய அம்சமாகும்.

சுற்றுலாத்துறையில் புதிய வாழ்வாதாரத்தை உருவாக்குவதன் மூலமாக நாட்டில் அடையாளச் சின்னங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மாதிரியாக மட்டக்களப்பு கோட்டையை மாற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகவுள்ளது. உள்ளூர் சமூகத்தவர்களுக்கும் அங்கு விஜயம் செய்பவர்களுக்கும் பிரதேசத்தின் கலாசார பல்வகைத்தன்மைக்கு ஓர் உதாரணமாக விளங்கி புத்தூக்கத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

ஒரு தசாப்த காலத்திற்கு முன்னராக அமெரிக்க காங்கிரஸால் உருவாக்கப்பட்ட கலாசார பேணுகைக்கான அமெரிக்கத் தூதுவர்கள் நிதியமானது இதுவரையில் 100ற்கு மேற்பட்ட நாடுகளில் 640ற்கு அதிகமாக கலாசார பேணுகைத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

உலகளவில் கலாசாரப் பாரம்பரிய அருஞ்சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக 26மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையான நிதியை அமெரிக்கா வழங்கியுள்ளது. மிகமுக்கியமாக ஏனைய நாடுகளின் காலசாரப் பாரம்பரியத்தை அமெரிக்கா எந்தளவிற்கு மதிக்கின்றதென்பதன் ஆழத்தை வெளிக்காட்டுவதாக இது அமைந்துள்ளது.

2011ஆம் ஆண்டிற்கான கலாசார பேணுகைக்கான தூதுவர் நிதியத்தின் மூலமாக நிதியுதவி வழங்கப்பட்ட இரண்டு திட்டங்களில் மட்டக்களப்பு கோட்டை திட்டம் ஒன்றாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க காலி கோட்டை மற்றையதிட்டமாகும்.

2013ஆம் ஆண்டிற்கான கலாசார பேணுகைக்கான தூதுவர் நிதியத்தின் உதவிகளுக்காக விண்ணப்பங்களை அமெரிக்கத் தூதரகம் தற்போது ஏற்றுக்கொள்கின்றது.

## இலஞ்சம் பெற்ற இரு பொலிஸார் பதவி நீக்கம்

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தம்புத்தேகம பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு கான்ஸ்டபிள்கள் இருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தம்புத்தேகம பொலிஸ் பரிசோதகர் உபுல் செனவிரத்ன தெரிவித்தார்.

வீதி விதிமுறையை மீறிய மோட்டார் சைக்கிள் செலுத்துனரை சட்டத்தில் இருந்து தப்பிக்கச் செய்ய அவரிடம் ஆயிரம் ரூபா பணம் மற்றும் மதுபானத்தை இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இலஞ்சமாகப் பெற்றுள்ளனர்.

இலஞ்சம் பெற்ற வேளை தம்புத்தேகம பொலிஸ் பரிசோதகரால் குறித்த இரு கான்ஸ்டபிள்களும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி தொழிலாளி பலி: மற்றொருவர் ஆபத்தில்

பிலியந்தலை - ஹொரண வீதியில் புவக்கஸ்சந்தி பகுதி யில் மின்சாரம் தாக்கி ஒருவர் பலியானதோடு மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.10 அளவில் இடம்பெற்றுள்ளது.

கட்டடம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் மூங்கிலில் அமர்ந்திருந்த வேளை, குறித்த மூங்கில் மின் கம்பியொன்றில் மோதி விபத்துக்குள்ளகியுள்ளது. இதன்போது பாதிக்கப்பட்ட இருவர் பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் 35 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

மற்றைய நபர் மேலதிக சிகிச்சைகளுக்கென களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஓய்வு

யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகநேசன் ஓய்வு பெற்றுள்ளார் என்று யாழ்.தலைமைப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேகர கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதனை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்தில் அணிவகுப்பு மரியாதையும் கௌரவிப்பும் இடம்பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குகனேசன் 37 வருடங்களாக பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓடும் பஸ்ஸிலிருந்து திருட்டு: யாழ்-தெல்லிப்பழை வழியில் சம்பவம்

தனியார் பஸ்ஸொன்றில் நேற்று வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சுமார் 10 பவுண் தங் கநகைகள் களவுபோயுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த பஸ்ஸிலேயே திருட்டு இடம்பெற்றதாகவும் பொலிஸார் கூறினர்.

உறவினரொருவரிடம் இரவலாகப் பெற்ற தங்கநகைகளை அடைவு வைப்பதற்காக இப்பஸ்ஸில் அதனை எடுத்துச்சென்ற இணுவிலைச் சேர்ந்த பெண்ணொருவர், தங்கநகைகள் வைக்கப்பட்டிருந்த கைப்பையைக் காணவில்லையென கூச்சலிட்டுள்ளார்.

இந் நிலையில், பஸ் சாரதி யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு பஸ்ஸைக் கொண்டுசென்றார்.

நகைகள் களவுபோனமை தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், இப்பெண் இணுவிலைச் சேர்ந்தவரென்பதால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அவரிடம் கூறியதாக யாழ். பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் கேட்டபோது, நகை களவுபோனமை இதுவரையில் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லையெனக் கூறினர்.


## வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரசூல் புதுவெளி கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது. இந்த வீட்டுத் திடடத்திற்கு 47 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நவம்பர் முதலாம் திகதி

## அனைத்துப் புனிதர்கள் தினம்

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்களால் நவம்பர் முதலாம் திகதி அனைத்துப் புனிதர்கள் தினமாக கொண்டாடப்படுகின்றது. புனிதர்களின் தினத்தில் விசுவாச வாழ்வில் புனிதர்வழி நாங்கள் செல்ல




புனிதர்களின் உறவு நம் அச்சத்தைப் போக்குகிறது"

என்கிறார் பரிசுத்த பாப்பரசர்.

ஒவ்வொரு புனிதரும் தங்கள் மனநிலை ஆளுமைத்தன்மையிலும் ஆன்மீக தனி வரங்களிலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டு நின்றாலும் அனைவரும் இயேசுவின் அன்பின் பதிப்புக்களாகவும் சிலுவையின் சாட்சிகளாகவும் ஒன்றிணைந்து நின்றார்கள் என்று பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் மறையுரையாற்றியுள்ளார்.

பல்வேறு துன்ப வேதனைகளை [illegible], துன்பச் சோதனைகளையும் [illegible]ர்த்தியாகங்களையும் கடந்து சென்றே புனிதர்கள் இயேசுவின் மகிழ்வால் பங்கு கொண்டுள்ளார்கள் என்பதையும் அவர் நினைவூட்டியிருந்தார்.

இந்தப் புனிதர்கள் எல்லோரும் எவ்வாறு விண்ணக மகிமையில் வீற்றிருக்கின்றனர் என்றும் நாம் கடவுளின் மக்களாக இருந்தோம் என்றால் நாம் அவர்கள் கண்ட விசுவாச வாழ்வு போலவே காண்போம் எனவும் மறையுரை வாசகங்கள் எடுத்துரைக்கின்றன.

நற்செய்தி வாசகமானது புனித வாழ்வினை நாம் கைக்கொண்டு வாழ வேண்டுமென்றால் இவ் உலகில் நாம் எவ்வாறான ஏற்றத் தாழ்வுகளையும் இழிநிலைகளையும் அடைந்தாலும் இறைவனின் அரியணை முன்னே நாம் பேறு பெற்றவர்களாவோம் என்பதனை இறைவன் எடுத்தியம்புவதைக் காண்கின்றோம்.

புனிதர்கள் எனப்படுவோர்


மனிதராகப் பிறந்தவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் திகழ்ந்தவர்கள், தங்களது சான்று வாழ்வின் வழியாக இறைவனைப் பலருக்கு அறிமுகப்படுத்தியவர்கள் என்றும் இறைவனோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தம்மை நோக்கி மன்றாடுபவர்களுக்காக இறைவனிடம் பரிந்துரைப்பவர்கள், சிலர் தங்கள் உயிரையே இறைமாட்சிக்காகக் கையளித்தவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒருவருக்கு திருச்சபை புனிதர் பட்டம் வழங்குமுன் மூன்று படி நிலைகளைக் கையாள்கிறது. வணக்கத்துக்கு உரியவர் நிலை முக்திப்பேறு பெற்றவர் அல்லது அருளாளர் நிலை புனிதர் நிலை என்பனவே அவையாகும்

இந்தப் புனிதர்களின் வழிநடந்து திருச்சபை இன்று வரை எத்தனையோ போர்களையும், கலாபனைகளையும், அச்சுறுத்தல்களையும் கடந்து உலகினை செழிப்பாக்கிக் கொண்டிருக்கின்றது.

புனிதர்கள் காட்டிய வழியில் நாமும் நம் வாழ்க்கை வழியில் பயணித்து இறுதி நாளில் முடிவில்லாத பேரரசில் இணைய வரம் வேண்டுவோம்.

## தியாகத் திருநாளாக சிறப்புப் பெறும் ஹஜ்ஜுப் பெருநாள்

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவர்களது குடும்பமும் இறை நேசத்தை அன்பைப் பெறுவதற்காக செய்த தியாகத்தை நினைவு கூர்ந்து [illegible]க முஸ்லிம்கள் ஒன்றுபட்டு கொண்டாடும் நன்னாளே ஹஜ்ஜுப் பெருநாளாகும். ரமழான் நோன்பாக பின் கொண்டாடும் ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளிற்கு அடுத்ததாக முஸ்லிம்கள் இரண்டாவதாகக் கொண்டாடும் நன்நாள் இதுவாகும்.



உலக முஸ்லிம்கள் புனித மக்கமா நகரிலே ஒன்று கூடி இறை வழிபாட்டில் ஈடுபட்டு இறையன்பைப் பெறுவதைப்போலும் உலகின் நாலா பக்கங்களிலும் வாழும் முஸ்லிம்கள் ஆங்காங்கே தியாகத் திருநாளை கொண்டாடுவதையும் இந்நாளில் தினம் சிறப்பான அம்சமாகப் பார்க்க முடியும்.

மனிதனைப் படைத்த ஏக இறைவன் மானிட இனத்தின் அனைத்துத் துறைக்கும் நேரிய வழிகாட்டலை வழங்கியுள்ளதை அவதானிக்க முடியும். இன்பமும், துன்பமும் மானிட வாழ்க்கையில் பிரிக்க முடியாத இரு கூறுகளாகும். இதன் மத்தியிலேயே உலகில் நல்லவனாக மனிதன் வாழ்ந்து இறையன்பையும் நேசத்தையும் பெற வேண்டிய தேவையுள்ளது.

படைத்த இறைவனுக்காக எதனையும் தியாகம் செய்வதற்கு மனிதன் தன்னை எந்நேரமும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்குச் சிறந்த வழிகாட்டலாக நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது.

இஸ்லாமிய வருடக் கணிப்பில் இறுதி மாதமாக அமையப்பெற்றுள்ள துல்ஹஜ் மாதத்தில் செய்கின்ற நல்ல செயல்கள் இறைவனிடத்தில் பல மடங்குக் கூலிகளைப் பெற்றுத்தருவதுடன் பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன.

இஸ்லாம் மனிதன் மீது வாதித்துள்ள ஒவ்வொரு கடமையும் மனிதனைப் புனிதனாக்குகின்றது.


தொழுகையானது மானக்கேடான விடயங்களிலிருந்து முஸ்லிமைத் தடுக்கின்றது பாதுகாக்கின்றது. நோன்பு இறையச்சமுள்ளவனாக, "தக்வா" உள்ளவனாக மனிதனை பயிற்றுவிக்கின்றது. புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஓர் முஸ்லிமை பாவத்தைவிட்டு பரிசுத்தப்படுத்தி அன்று பிறந்த பாலகனைப் போன்று மாற்றியமைக்கின்றது.

ஹஜ் கடமை மனிதவர்க்கத்தைச் சமப்படுத்துகின்றது. ஹஜ் பயணத்தில் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் கிடையாது. எல்லோரும் அல்லாஹ்வின் அடிமைகள் என்பதனை நிரூபிக்கக் கூடியது தான் புனித ஹஜ் பயணமாகும். புனித ஹஜ் கடமையை நினைவுகூர்ந்து உலக முஸ்லிம்கள் தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகிறார்கள்.

*அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக்*

# சமய தீபம்

## ஆலயம்



எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை உருவ வடிவில் வழிபடும் இடம் ஆலயம் ஆகும். ஆ என்பது ஆன்மா எனவும், லயம் என்பது லயப்படுதல் எனவும் பொருள் கொள்ளப்படுவதால் ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் எனப்படுகின்றது. ஆலயம், கோயில் எனவும் அழைக்கப்படும். கோயிலைக் குறிக் கும் பல சொற்கள் சிற்ப நூல்களில் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் இறைவனின் உறைவிடம் என்ற கருத்தைச் சுட்டுகின்றன. தேவகிருகம், தேவாகாரம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவபவனம், தேவஸ்தானம், சைத்யம், ஷேத்திரம், பிரசாதம் என்பன கோயிலைக் குறிக்கும் சொற்களாகும்.

சிவன் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பினும் பாலில் நெய்போல் விளங்காது இருக்கிறார். குருவிடமும், சிவாலயத்திலும், சிவனடியாரிடத்திலும் தயிரில் நெய்போல் வெளிப்பட்டு விளங்குகின்றார். அடியார் சிந்தையில் இறைவன் உறைவதால் அடியார் உடம்பு ஆலயமாகத் திகழ்கின்றது என்பதைத் திருமுறைகள் தெளிவுபடுத்துகின்றன. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம்,

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"**

என விளக்குகின்றது. அதாவது உள்ளத்தினைக் கர்ப்பக்கிரகமாகவும் உடம்பினை ஆலயமாகவும், வாயினைக் கோபுரவாசலாகவும், உயிரினைச் சிவலிங்கமாகவும், ஐம்புலன்களைப் பெரிய மணிவிளக்காகவும் கூறி இந்த ஊனுடம்பை ஆலயமாகக் குறிப்பிடுகின்றது.

*திருமதி.ரு.பகீதரன்*
*(நன்றி: சைவப் புலவன் )*

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

26.10.2012: இரண்டாவது ஐப்பசி வெள்ளி
27.10.2012: சனிப்பிரதோஷ விரதம்
29.10.2012: பூரணை விரதம்
29.10.2012: திருமூலநாயனார் குருபூசை
30.10.2012: ஐப்பசி பரணி
31.10.2012: கார்த்திகை விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

01.11.2012: அனைத்துப் புனிதர்கள் தினம்

**முஸ்லிம்களுக்குரிய விசேட தினங்கள்**

27.10.2012 சனி: ஹஜ்ஜுப் பெருநாள்

## கதிர்வேல் முருகன் தனிப்பெருங் கருணை

அலையெறி கடல்தொடு அடிவான் அருக்கனாய்
அகமதில் அரும்பும் கதிர்வேல் முருகன்
அகர உயிர்போல அறிவாக எங்கும்
நிகரில் இறையாம் தனிப்பெருங் கருணை

அன்பும் அறிவும் அவ்வழி அருளும்
தன்வடி வான கதிர்வேல் முருகன்
அனலாய் கனலாய் வளியிடை சென்று
புனலிலே வளர்ந்த தனிப்பெருங் கருணை



அன்பின் உருவாய் அன்பார் பண்பாய்
அன்பராய் ஆளும் கதிர்வேல் முருகன்
அன்பினுக் கடிமையாய் அடியவர்க் கன்பாய்
அன்பே அகமாம் தனிப்பெருங் கருணை.

*- சபா. கதிரவேலு (கதிரைமலையான்)*

## பெய்யென பெய்யும் மழை- சரியான விளக்கம் என்ன?

***"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதுஎழுவாள் பெய்எனப் பெய்யும் மழை"*** என்கிறது திருக்குறள்.




இக் குறளுக்கு பலரும் பல விதமாக உரை எழுதியிருக்கிறார்கள். காலையில் துயில் எழும்போது பிறிதொரு தெய்வத்தை தொழாமல் கணவனையே தெய்வமாக கருதி தொழுகின்ற பத்தினி, பெய் என்றாள் மழை பெய்யும். இதன் மேலும் பல்வேறுபட்ட உரைகள் இக்குறளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உரைதான் பொருத்தமுடையது என அறிஞர் உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

பெய் எனப் பெய்யும் மழை என்பதற்கு கணவனையே தெய்வமாக தொழும் பத்தினிப் பெண்ணானவள் பெய் என்றாள் பெய்துதவும் மழை என பொருள் கூறிவிட முடியும். கணவனே தன் தெய்வமெனக் கொண்டவள் மழையைப் போன்றவள். யாருக்கு? - அவளது கணவனுக்கே மழையைப் போன்றவள். அதுவும் எப்படிப்பட்ட மழை?

பெய்ய வேண்டும் என்று கூறிய மாத்திரத்தில் பெய்யக்கூடிய மழையைப் போன்றவள். வாடிய பயிர்களுக்கு எல்லாம் உழவன் நினைத்த போது மழை பொழிந்து விட்டால் அந்த மழை எத்தனை குடும்பங்களின் நல்வாழ்த்தைப் பெறுகிறதோ, இவ்வாறே மனிதன் வாழ உலகை உய்விக்கும் மழையை மகளிரோடு ஒப்பிட்டு கணவனும் குடும்பத்தவர்களும் வாழ பெய்யென பெய்யும் மழையைப் போன்றவள் மனைவி என பாரதிதாசனின் சொல்லும் உரையினை அறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டது.

*இ.சிறிஸ்கந்தராசா*
*(திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள்)*

# வெடிகொளுத்தி நேர்த்தி செய்யும் முறைமை

நேர்த்திக்கடனாக, நான் இவ்வளவு வெடிகளை வாங்கி உன் திருச் சன்னிதானத்தில் கொளுத்தி வைப்பேன் என்று பிரார்த்திப்பவர்களை நாம் கண்டிருக்கின்றோம். நம் நாட்டில் கிறிஸ்தவமதப் பிரிவினரிடையேயும், இந்துக்களிடையேயும் இந்த வழக்கம் இன்றும் சிறப்பாக உண்டு. பிரபஞ்சம் உருவானதில் "பிக்- பாங்கியரி" என்ற சித்தாந்தம், பலகோடி வருடங்களுக்கு முன் பிரபஞ்சத்தில் ஒரு மகாவெடி ஒலித்ததென்றும், அவ்வெடி யோசையினால் நிகழ்ததே விண்வெளிக் கோளங்கள், கிரகங்கள் முதலியன என்றும் நம்பப்படுகின்றது. இவ் ஆராதனைகளில் எழுப்பப்படும் வெடி ஓசையானது உயரும் போதும், சுற்றுச் சூழலிலுள்ள விஷ அணுக்களும், தீய சக்திகளும் அகன்று போகின்றன என்பதும் உண்மையே.

மேலும், துயிலும் இறைவனை எழுப்பி, நாம் வந்திருப்பதை

அறிவித்து, விழிக்க வைப்பதற்காக செய்யும் வழிபாடே இவ்வழிபாடு என்றும் பழைய நம்பிக்கையொன்றும் இருந்து வந்திருக்கிறது. சண்டீஸ்வரருக்கு "கை தட்டி" வழிபாடு செய்யும் சம்பிரதாயத்துக்குச் சொல்லப்படுவது போல இதுவும் என்பர்.

கையிலிருக்கும் பணத்தைக் கொட்டி, வெடிகள் வாங்கி, பெரிய ஓசை எழுப்பி காதை அடைக்கச் செய்வதில் என்ன பக்தி இருக்கிறது என சிந்திக்கும் பகுத்தறிவாளர்கள் சிலர் இந் நம்பிக்கையையும், வழக்கத்தையும் எள்ளி நகையாடுபவர்களாகவும் உள்ளனர்.

மன ஒருமைப்பாட்டுடன் நிம்மதியாக சிறிதுநேரம் பிரார்த்தனை செய்யலாமென்று வந்தால் காதை அடைக்கும் வெடியோசை கேட்கிறதே என சலித்துக்கொள்பவர்கள். பாரம்பரிய நம்பிக்கைகளை ஓரளவு சகித்துக் கொள்வதுடன் கோயிற்சடங்குகளோடு, மகிழ்ச்சி ஆரவார அம்சங்களோடு

பொருத்திப் பார்க்கலாம். பக்தி பலதையும் செய்ய, செய்விக் கவல்ல ஆற்றல் பெருந்தியது.

*- எம்.எஸ்.ஸ்ரீதயாளன்*
*(அர்த்தமுள்ள சம்பிரதாயம்)*




ஒரு வாரத்தில் கூட அவர்களால் அதை அசைக்க முடியாது! தைரியமாயிருங்கள் தோழர்களே! நெப்போலியன் முணுமுணுத்தது. ஆனால் அந்த மனிதர்கள் செயல்களை பெஞ்சமின் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தது. காற்றாடி யந்திரக் கட்டிடத்திற்கருகிலே, அந்த இரண்டு மனிதர்களும் ஒரு ஓட்டை போட்டார்கள். பெஞ்சமின் மெதுவாக, ஏதோ வேடிக்கை பார்த்து ஆனந்திப்பது போன்ற ஒரு ஆர்வத்துடன் சொல்லிற்று.

"அப்படித்தான் நான் நினைத்தேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது தெரியவில்லையா? அந்த ஓட்டையில் வெடிமருந்தைத் திணிக்கப் போகிறார்கள்.' பீதியடைந்த நிலையில் விலங்குகள் காத்திருந்தன. சில நிமிடங்களுக்கெல்லாம் மனிதர்கள் நான்கு பக்கமும் சிதறி ஓடி ஒளிந்து கொண் டார்கள். பிறகு அங்கே காது செவிடுபடும்படியாகப் பிரமாண்டமான ஒலி ஒன்று கேட்டது. புறாக்கள் காற்றிலே பறந்தன.

நெப்போலியனைத் தவிர மற்ற மிருகங்களெல்லாம் குப்புறப்படுத்து முகத்தை மூடிக்கொண்டன.

அவை எழுந்து பார்த்தபோது, எதுவும் கண்ணில் படாமல் ஒரே புகைப்படலமாக இருந்தது. காற்றிலே புகைப்படலம் மறைந்தபின் பார்த்தபோது காற்றாடி யந்திரக் கட்டிடம் அங்கில்லை என்பது தெரிந்தது. கட்டிடம் தகர்ந்து இடிந்துவிட்டது. இதைப் பார்த்த மிருகங்களுக்கு ரோஷமும் ஆத்திரமும் தைரியமும் அளவுகடந்து வந்தது.

பலமும், கோழைத்தனமும், ஒன்றும் செய்யமுடியாது என்கிற மனோபாவமும் உடனே மறைந்து விட்டது. எவ்வளவு சிரமப் பட்டுக் கட்டிய கட்டிடத்தை தரைமட்டமாக்கிவிட்டார்கள் இந்த மனிதர்கள். வஞ்சம் தீர்த்துக் கொள்வோம் என்று மிருகங்கள் ஒரு குரலாகக் கூக்குரலிட்டுக் கொண்டு பாய்ந்து தாக்கின. விலங்குகள் எல்லாம் ஒரே சமயத்தில் ஒன்றுகூடிப் பாய்ந்து மனிதர்களைத் தாக்கின. துப்பாக்கிக் குண்டுகளையோ, வெடிகளையோ அவை இந்தத் தடவை லட்சியமே செய்யவில்லை. மிகவும் கோரமான யுத்தம் அது. மனிதர்கள் திரும்பத் திரும்ப துப்பாக்கிகளால் சுட்டார்கள்.

விலங்குகள் நெருங்கிவந்தபோது சாட்டைகளாலும் தடிகளாலும் அடித்தார்கள். ஒரு பசு, மூன்று ஆடுகள், இரண்டு வாத்துகள் அங்கேயே செத்து மடிந்தன. பின்னாலிருந்து கொண்டு யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்த நெப்போலியனின் வாலைக்கூட ஒரு துப்பாக்கிக் குண்டு தாக்கி விட்டது. மனிதர்கள் கட்சியிலும் சேதம் ஏற்படாமல் இல்லை. பாக்ஸரின் உதையால் மூவருக்கு மண்டை உடைந்துவிட்டது.

ஜெஸ்லியும் ப்ளூபெல்லும் வயிற்றில் குத்திக் கிழித்துவிட்டது. ஜெஸ்லியும் ப்ளூபெல்லும் சேர்ந்து கொண்டு ஒருவனின் கால்சட்டையைப் பல்லால் கடித்திழுத்தன. அவன் அநேகமாக நிர்வாணமாக-விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். நெப்போலியனின் காவல் படை வீரர்களாகிய ஒன்பது வேட்டை நாய்களும் வேலி ஓரமாக மறைவாகப் போய் சமயம் பார்த்து பின் பக்கத்திலிருந்து தாக்கின. அவை எழுப்பிய ஊளைகளைக் கேட்டே மனிதர்கள் பயந்துபோனார்கள்.

**(நாளை)**

# அன்பு மனம்

அது ஒரு மிருகங்கள் மற்றும் பறவைகளை விற்பனை செய்யுமிடம். அந்தக் கடைக்கு விதம் விதமான வண்ண வண்ண ஆடம்பரக் கார்களில் மக்கள் வந்து தமக்குப் பிடித்த பிராணிகளை வாங்கிச் செல்வது வழக்கம். அந்த கடை கண்ணாடியால் அழகு படுத்தப் பட்டிருந்ததால் பிராணிகளின் அழகும் போவோர் வருவோரைக் கவர்ந்தது. பலர் அங்கு நின்று வேடிக்கை பார்த்துச் செல்வார்கள்.

வேடிக்கை பார்ப்பவர்களோடு பத்தோடு பதினொன்றாக ஒரு ஏழைச்சிறுவனும் நின்று தினமும் வேடிக்கை பார்ப்பான். அவனுக்கும் அங்குள்ள அழகான நாய்க்குட்டிகளில் ஒன்றை வாங்கி விட வெகு நாள் ஆசை.



சிறிது சிறிதாக சேமித்து 10 ரூபாய் சேர்த்தான். பின் கடைக்குச் சென்று கடைக்காரரிடம் நாய்க் குட்டி வாங்க வேண்டுமென்றான். அவரும் நாய்க் குட்டிகளை பார்க்க அனுமதித்தார். அவன் எல்லா குட்டிகளையும் பார்த்து விட்டு ஒதுக்குப் புறமாக படுத்திருந்த அழகான கருப்பு நிற நாய்க்குட்டி யொன்றை எடுத்துக் கொண்டு வெளியே வந்து, கடைக்காரரிடம் பத்து ரூபாயைக் கொடுத்தான்.

கடைக்காரர் அவனைப் பார்த்து "ஏனடா தம்பி 10 ரூபாய்க்கு யாராவது நாய்க்குட்டி தருவாங்களா?" என்றவாறே குட்டியைப் பறித்துக் கொண்டார். பின்பு பத்து ரூபாயைச் சிறுவனை நோக்கி எறிந்து விட்டு குட்டியைக் கூண்டில் போட எடுத்துச் செல்கையில் தான் பார்க்கிறார், அந்த நாய்க்குட்டி ஒருகால் பலமின்றி மூன்று கால்களுடன் ஊனமானதாக தள்ளாடுவதை. பின் சிறுவனிடம் வந்து சொன்னார்,

இந்தக் குட்டியை கொண்டு வரும் போது இதன் கால்கள் முறிந்து விட்டது. இதைக் யாரும் விலை கொடுத்து வாங்க மாட்டார்கள்.கருணைக் கொலைதான் செய்ய நினைத்தேன். நீ வேண்டுமென்றால் இலவசமாக எடுத்துச்செல் என்றார்.

சிறுவன் ஆவலோடு ஓடிச் சென்று நாய்க்குட்டியை வாங்கித் தழுவிக் கொண்டான்.


பின் தன் 10 ரூபாயைக் கடைக்காரரிடம் கொடுத்து விட்டு, நாய்க் குட்டியை அணைத்து முத்தமிட்டவாறு "உனக்கு நான் உள்ளேன் தோழர் யார் உன்னை ஊனம் என்றார்கள்" என்றவாறே விந்தி விந்தி நடந்து சென்றான்.

### வெற்றிபெற மூன்று வழிகள்

ஒன்று மற்றவர்களை விட அதிகமாக தெரிந்துகொள்ளுங்கள், இரண்டு மற்றவர்களை விட அதிகமாக பணியாற்றுங்கள், மூன்று மற்றவர்களை குறைவாக எதிர்பாருங்கள்.

**- வில்லியம்ஸ் ஷேக்ஸபியர்**

### வண்ணம் தீட்டுங்கள்



# சிறுவர் அமுதம்

### முதலுதவி கருவிப் பெட்டி





முதலுதவி கருவிப் பெட்டிகள் கிட்டத்தட்ட எந்த மாதிரியான கொள்கலனிலும் தயாரிக்கப்படலாம். மேலும் இது வணிக ரீதியாக தயாரிக்கப்படுகின்றனவா அல்லது தனிமனிதர்களால் பொருத்தப்படுகின்றனவா என்பதைப் பொறுத்தது. தரமான கருவிப் பெட்டிகள் பெரும்பாலும் நீடித்த பிளாஸ்டிக் பெட்டிகள், துணிப் பைகள் அல்லது சுவற்றில் பொருத்தக்கூடிய பேழைகளில் வருகின்றன. பயன்பாட்டைப் பொறுத்து கொள்கலனின் வகையானது மாறுபடும். அவை சிறு தோற்பைகள் முதல் தோளில் சுமந்து செல்லும் சாக்குப்பைகள் வரையில் பல்வேறு அளவுகளைக் கொண்டுள்ளன.

அனைத்து கருவித் தொகுப்புகளும் தூய்மையாகவும் உள்ளடக்கங்களை பாதுகாப்பாகவும் அழுகலற்றதாகவும் வைக்க நீர்புகா கொள்கலன்களைக் கொண்டிருக்குமாறும் பரிந்துரைக்கப்படுகின்றன. கருவிப் பெட்டிகளை வழக்கமாக பரிசோதித்து அதில் உள்ள பொருட்களில் ஏதேனும் சேதம் ஏற்பட்டிருந்தா லும் அல்லது காலாவதியாகியி ருந்தாலும் அவற்றை மாற்ற வேண்டும்.

சர்வதேச தரநிர்ணய அமைப்பு (ISO), யாருக்காவது முதல் உதவி தேவைப்பட்டால் அவர்கள் எளிதாக அடையாளம் கண்டு பயன்படுத்தும் வகையில் முதலுதவி கருவிப் பெட்டிகள் பச்சை நிறத்தில் வெள்ளைச் சிலுவையுடன் அமைந்திருக்க வேண்டும் என்ற தரநிலையை அமைத்திருக்கின்றது.

### வெள்ளை



வேகமாக ஓடுது.
குள்ளி முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது
நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது.
குட்டையான வாலையே
குறுகுறுன்று ஆட்டுது!

### ரேடியோ வானவியல் (Radio Astronomy)

பிரபஞ்சத்தினை ஆராய்வதற்கு ரேடியோ அலைகளைப் பயன்படுத்தும் துறை இது. சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள் போன்ற எல்லாமே ரேடியோ அலைகளை வெளியிடுகின்றன. ஒளியைவிட அதிக அலை நீளம் கொண்டவை ரேடியோ அலைகள். இரண்டாம் உலகப் போரின்போது ராடார் கண்டுபிடிக்கப்பட்டது.

**சுடோக்கு எண் 81 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 1 | 9 | 4 | 5 | 2 | 7 |
| 7 | 2 | 4 | 5 | 6 | 8 | 1 | 3 | 9 |
| 1 | 9 | 5 | 7 | 2 | 3 | 8 | 4 | 6 |
| 8 | 6 | 3 | 2 | 4 | 5 | 9 | 7 | 1 |
| 2 | 4 | 7 | 9 | 1 | 6 | 3 | 8 | 5 |
| 9 | 5 | 1 | 8 | 3 | 7 | 4 | 6 | 2 |
| 3 | 8 | 9 | 6 | 7 | 1 | 2 | 5 | 4 |
| 5 | 1 | 6 | 4 | 8 | 2 | 7 | 9 | 3 |
| 4 | 7 | 2 | 3 | 5 | 9 | 6 | 1 | 8 |

**சுடோக்கு எண் 82**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | | | | 4 | 1 | | |
| 9 | 2 | 7 | | 3 | | 4 | 6 | |
| | 5 | 1 | | | 7 | 2 | 8 | |
| 5 | 4 | | 3 | | | | 2 | |
| | | 9 | 6 | | 8 | 5 | | |
| | 6 | | | | 5 | | 9 | 8 |
| | 3 | 4 | 1 | | | 8 | 5 | |
| | 1 | 6 | | 8 | | 9 | 4 | 7 |
| | | 5 | 7 | | | | 3 | 1 |

# பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை வெளியீடு

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பரீட்சை திணைக்களம் தயாரித்துள்ள மதிப்பீட்டு அறிக்கை முதல் முறையாக மாணவர்கள் பெற்றோர் கொள்முதல் செய்யும் விதத்தில் சகல புத்தகசாலைகளிலும் விற்பனைக்கு விடப்பட வுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுவரை காலமும் பரீட்சைத் திணைக்களம் 1,85,000 பிரதிகளை அச்சிட்டு சகல அரசாங்க பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் அனுப்பி வருகிறது. எனினும், பெற்றோருக்கோ, மாணவர்களுக்கோ தனியார் பாடசாலைகளுக்கோ, சர்வதேச பாடசாலைகளுக்கோ, கிடைப்பதில்லை.

இந்த மதிப்பீட்டு, அறிக்கையில் வினாக்களும், விடைகளும், விடையளிக்கும் முறைகளும், புள்ளிகள் வழங்கப்படுகின்ற முறைகளும், புள்ளிகள் பெறுக் கொள்ளும் விகிதம், தோற்றிய மாணவர்கள், விடையளித்துள்ள வர்கள் பற்றிய முழு விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சை முடிவடைந்த பின்னர் பரீட்சை திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவினர் இந்த மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்துள்ளனர். கல்வி வெளியீட்டு திணைக்களமும் அரச அச்சகக் கூட்டுத்தாபனமும் இணைந்து இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளது. சந்தையில் மிகக் குறைந்த விலைக்கு (80 ரூபாவுக்கு) பெற்றுக் கொள்ளக் கூடியதாக இப்புத்தகம் வெளியிடப்படும்.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சிங்களம், வரலாறு ஆகிய பாடங்களின் மதிப்பீட்டு அறிக்கைகளே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பாராளுமன்றமல்ல அரசியல் யாப்பே மிக உயர்ந்ததாம்

"பாராளுமன்றம் அல்ல, நாட்டின் அரசியல் யாப்பே மிக உயர்ந்ததாகும்" என்று உயர் நீதிமன்றத்தில் திவிநெகும எனப்படும் வாழ்வெழுச்சி சட்டமூலத்திற்கு எதிராக வாதிடுகையில் சட்டத்தரணி விரான் கொரியா தெரிவித்தார். மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து தாக்கல் செய்த மனு சார்பில் ஆஜராகி வாதிடுகையிலேயே சட்டத்தரணி விரான் கொரியா மேற்கண்டவாறு தெரிவித்தார். பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கா மற்றும் நீதியரசர்கள் என்.ஜி. அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்கண்டவாறு சட்டத்தரணி விரான் கொரியா தெரிவித்தார்.

## நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய கருத்தாடல் நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், சர்வதேச மார்க்சியக் குழுவின் ஏற்பாட்டில் 'நல்லிண ஆணைக்குழு - ஒரு பார்வை' என்ற தலைப்பிலான கலந்துரையாடலொன்று நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் பிற்பகல் 4.30 மணியளவில் இக் கலந்துரையாடல் ஆரம்பமாகும். திரு. சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தாடலில் திரு. ஏ.சி. ஜோர்ஜ் உரையாற்றவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரையும் சமூகமளிக்குமாறு யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச மார்க்சியக் குழு கோரியுள்ளது.

# குடிசைக் கைத்தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

வாழ்வின்எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப கைத்தொழில் நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட குடிசைக் கைத்தொழிலாளர்களுக்கான சான்றுப் பத்திரங்கள் மற்றும் தொழில்சார் உபகரணத் தொகுதிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கினார்.

கொழும்பு, பௌத்தலோகமாவத்தையில் அமைந்துள்ள தொழில்நுட்ப கைத்தொழில் நிறுவனத்தில் மேற்படி நிகழ்வு நேற்று நிறுவனத் தலைவர் பேராசிரியர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வாழ்வின்எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் 15 மாவட்டங்களில் நடாத்தப்பட்ட வாழ்வின்எழுச்சி (திவிநெகும) கண் காட்சிக்கு அமைவாக குடிசைக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி நிறுவனத்தால் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன் மூலம் 535 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சான்றுப்பத்திரங்கள் மற்றும் தொழில்சார் உபகரணத் தொகுதிகள் அமைச்சர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் உமேகா ரத்நாயக்க, வாழ்வின் எழுச்சி திட்டப் பணிப்பாளர் கமகே மற்றும் அதிகாரிகளும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





## அசிட் வீச்சு ஏழு எதிரிகளுக்கு கடூழியச் சிறைத் தண்டனை

கணக்காய்வாளர் லலித் அம்பன்வெல மீது 2002ஆம் ஆண்டு அசிட் வீசினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட ஏழு எதிரிகளுக்கு கண்டி மேல்நீதிமன்றம் பத்தில் இருந்து இருபது வருடங்கள் வரை கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

இந்த வழக்கின் பிரதான குற்றவாளியான மொஹமட் ராசிக் மொஹமட் என்பவருக்கு இருபது வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவருக்கு எட்டு இலட்சம் ரூபா அபராதம் கட்டுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்குக்கென விசேடமாக நியமிக்கப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி பிரிதி பத்மன் சூரசேன என்பவரே மேற்கண்ட தண்டனையை விதித்தால் அசிட் வீச்சிற்கு இலக்கான முன்னாள் கணக்காய்வு சுப்பிரீண்டன்ட் லலித் அம்பன் வெலவிற்கு 50 இலட்ச ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சதி கொலை முயற்சி அசிட் வீசுவதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் பிரதான எதிரியான மொஹமட் ராசிக் மொஹமட் மீது சுமத்தப்பட்டிருந்தன. இந்த வழக்கின் முதலாவது எதிரியான டொன் ஆனந்த குணசிங்க என்பவருக்கு பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரியான ஆனந்த வீரசிங்க என்பவருக்கு பத்து வருட கடூழியச் சிறைத் தண்டனையும், இரண்டு இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், எதிரிகளுக்கு சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன.

## நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் நாளை பரிசளிப்பு

யாழ்ப்பாணம் நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நாளை 26ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பரிசளிப்பு விழா அதிபர் எஸ்.எக்ஸ். அன்ரன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம அதிதியாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.வி. செல்வராசாவும், சிறப்பு அதிதியாக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.வை. ரவீந்திரன், யாழ் அருளகம் பணிப்பாளர் வண பிதா ஏ.எம். ஸ்ரீபன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# சைவப்புலவர் சங்கப் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்

(மருதனார்மடம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கப் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் எதிர்வரும் நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு கல்லடி, உப்போடை சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

காலை அமர்வு 8.30 மணிக்கு சங்கத் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் ஆரம்பமாகும். நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளையும், விழாச் செயலாளர் சைவப்புலவர் சு. துஷ்யந் வரவேற்புரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

பேராசிரியர் சி. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. விமலநாதன், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி. க. பிரேம்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

பண்டிதர் சைவப்புலவர் க. நல்லரத்தினத்திற்கு சைவசித்தாந்த வித்தகர் எனும் கௌரவப்பட்டமும், தொழிலதிபர் வி. ரஞ்சிதமூர்த்திக்கு சைவப்புரவலர் எனும் கௌரவப் பட்டமும் வழங்கவுள்ளதோடு, 2012 சித்திரை மாதம் நடாத்திய தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கு சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பட்டமும் வழங்கப்படவிருக்கின்றது. பட்டமளிப்பு பேருரையை பேரா சிரியர் சி. பத்மநாதன் நிகழ்த்துவார்.

காலை அமர்வின் நிறைவாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைநெறி மாணவர்களின் நடன நிகழ்வின்பின், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவ சித்தாந்த கலாநிதி செ.கந்தசத்தியதாசன் நன்றியுரை நிகழ்த்துவார்.

மாலை அமர்வு பிற்பகல் 1.30 மணிக்கு சங்கத்தின் உபசெயலாளர் சைவப்புலவர் சா. தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமாகும். சைவப்புலவர் ஆர். கோபாலபிள்ளை வரவேற்புரையையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சைவப் புலவர் ஹேமலோஜினி குமரன் தொடக்கவுரையையும் நிகழ்த்துவார்கள்.

சைவநாதம் - 2012 சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறுவதுடன், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சாந்தி கேசவன் அதன் வெளியீட்டுரையையும், விரிவுரையாளர் செல்வி பா. நிலானி நயவுரையையும் நிகழ்த்துவார்கள்.

சைவமாநாடு பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மா. செல்வராஜா, அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும், சங்கத்தின் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சு. செல்லத்துரை, நிகழ்த்தும் மதிப்பீட்டுரையும், சைவப்புலவர் ஸோபா ஜெயரஞ்சித் வழங்கும் நன்றியுரையும் இடம்பெறும்.

# உலக பார்வை

## எங்களது தொழிற்சாலை மீது இஸ்ரேல் தான் தாக்குதல் நடத்தியது: சூடான் குற்றச்சாட்டு

எங்களது நாட்டிலுள்ள ஆயுத தொழிற்சாலை மீது இஸ்ரேல் தான் தாக்குதல் நடத்தியது என சூடான் குற்றம் சுமத்தி உள்ளது.

சூடான் தலைநகர் கார்டோமில் ஆயுத தொழிற்சாலை ஒன்று உள்ளது. இத்தொழிற்சாலையின் மீது கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பேர் இறந்தனர்.

இந்நிலையில் 4 இஸ்ரேல் விமானங்கள் தான் எங்கள் ஆயுத தொழிற்சாலையின் மீது தாக்குதல் நடத்தியது என கலாசார மற்றும் செய்தித்துறை அமைச்சர் அகமது பிலால் உஸ்மான் தெரிவித்துள்ளார்.


மேலும் இங்கிருந்து பாலஸ்தீன தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக சந்தேகம்



எழுந்ததன் பேரிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

பன்னாட்டு சட்டத்தை மீறி சூடான் ரசாயன மற்றும் உயிரி ஆயுதங்களை தயாரிப்பதாக கூறி கடந்த 1998ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலை மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது குறிப்பிடத் தக்கது.

## பிரபல குங் பூ வீரர் புரூஸ் லீ–யின் வீட்டை விற்க முடிவு




பிரபல குங் பூ வீரர் புரூஸ் லீ ஹொங்காங்கில் வசித்த வீடு ரூ.130 கோடிக்கு விற்கப்பட உள்ளது.

கடந்த 1970ஆம் ஆண்டுகளில் வெளிவந்த, பிஸ்ட் ஆப் ப்யூரி, என்டர் தி டிராகன் உள்ளிட்ட படங்களில் நடித்து உலகப் புகழ் பெற்றவர் குங் பூ வீரர் புரூஸ் லீ.

இவர் 32வது வயதில் மர்மமான முறையில் இறந்தார். ஹொங்காங்கில் கோவ்லூன் டோங் மாவட்டத்தில் இரண்டடுக்கு கொண்ட கட்டிடத்தில் இவர் கடைசியாக வசித்தார்.

460 ச.மீ கொண்ட இந்த வீடு தற்போது ஓட்டலாக செயல்பட்டு வருகிறது. இந்த கட்டிடத்தை மியூசியமாக அறிவிக்க வேண்டும் என புரூஸ் லீயின் ரசிகர்கள் பல காலமாக வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் இக்கட்டிடத்தின் உரிமையாளர் யூ பாங் லின் 130 கோடி ரூபாய்க்கு இந்த வீட்டை விற்க திட்டமிட்டுள்ளார்.

இது குறித்து யூ பாங் லின் கூறுகையில், ரசிகர்களின் வேண்டுகோளை ஏற்று அரசுடன் பல முறை இந்த கட்டிடத்தை மியூசியமாக மாற்றுவது குறித்து பேசினேன். ஆனால் அரசு இ[illegible] ஒத்துழைப்பு தரவில்லை.


இனிமேலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. தற்போது ஓட்டல் நடத்தும் உரிமையாளரும், இரண்டு ஆண்டுகளாக வாடகை பாக்கி வைத்துள்ளார். எனவே கட்டிடத்தை விற்க முடிவு செய்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

## விக்கிலீக்ஸ் நிறுவனர் அசாஞ்சுக்கு உடல்நலக்குறைவு

அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச்.

இதனால் அசாஞ்ச் மீது கடும் கோபத்தில் உள்ளது அமெரிக்கா. இந்நிலையில் அசாஞ்ச் மீது சுவீடன் அரசு பாலியல் வழக்கை தொடர்ந்துள்ளது.


இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக லண்டனில் தங்கியிருந்த அசாஞ்ச் கடந்த 2010ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அதன் பின் ஜாமீனில் வந்த



அசாஞ்ச், லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார்.

தற்போது அவருக்கு உடல்நலக்டிகுறைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஈக்வடார் வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் மார்கோ அல்புஜா மார்டினஸ் கூறுகையில், அசாஞ்சின் உடல்நிலை மிக மோசமாக உள்ளது.

அவரை மருத்துவமனையில் சேர்த்து உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கு பிரிட்டன் அரசு அனுமதி தரவேண்டும் என்று தெரிவித்தார்.



அமெரிக்காவின் வொஷிங்டன்னில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஆலோசனை மேற்கொண்ட பிரேசில் வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டோனியன் பேட்ரியோட்டா மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன்.


## பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் போட்டியிட முஷாரப் முடிவு

பாகிஸ்தானில் நடைபெறும் பொது தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில், முன்னாள் ஜனாதிபதியான பர்வேஸ் முஷாரப் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள முஷாரப் பாது காப்பு காரணங்களுக்காக நாடு திரும்பவில்லை. அதே சமயம் கடந்த 2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் முஸ்லிம் கட் சியை தொடக்கிய மு'ாரப் தேர்த லில் போட்டியிடுவதற்காக தனது ஆதரவாளர்களை தயார்படுத்தி னர்.

இந்நிலையில் பாகிஸ்தானில்



பொதுத் தேர்தல் ஓரிரு மாதங்களில் நடைபெற உள்ளது.

இத்தேர்தலில் கைபர் பாக் துங்கா மாகாணத்தில் உள்ள சித்ரல் தொகுதியில் போட்டியிட போவதாக அறிவித்துள்ளார்.

சித்ரல் தொகுதியின் மூத்த தலைவர்களுடன் பேசும் போதே இந்த அறிவிப்பை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒபாமா பற்றி அவதூறு பேச்சு: மன்னிப்பு கோரினார் மிட் ரோம்னியின் மகன்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பற்றி அவதூறாக பேசியதற்காக, எதிர்கட்சி வேட்பாளரான மிட்ரோம்னியின் மகன் மன்னிப்பு கோரினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 6ம் திகதி நடைபெற உள்ளது.

கடந்த 16ம் திகதி நியூயார்க் பல்கலைக்கழகத்தில் நடந்த இரண்டாவது விவாதத்தின் போது, ஜனாதிபதி ஒபாமா- குடியரசு கட்சி வேட்பாளர் மிட்ரோம்னி ஆகியோர் விவாதம் நடத்திய போது ரோம்னியை ஒபாமா தனது பேச்சினால் திணறடித்தார்.

இது குறித்து ரோம்னியின் மூத்த மகன் டாக் ரோம்னி வடக்கு கரோலினாவில் வானொலி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், நான் அங்கு இருந்திருந்தால் ஒபாமாவிற்கு மூக்குடைத்தாற் போல் பதிலடி கொடுத்து நாற்காலியை ஆட்டம்



காண வைத்திருப்பேன் என்றார்.

இந்த பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியதை தொடர்ந்து டாக் ரோம்னி, ஒபாமாவிடம் மன்னிப்பு கோரினார்.

இது குறித்து டாக் ரோம்னி கூறுகையில், ஏதோ ஜோக் அடித்தேன் தவிர அப்படி ஒன்று தவறாக பேசவில்லை. தவறு இருந்தால் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றும் ஒபாமாவும் மன்னித்துவிட்டார் எனவும் கூறியுள்ளார்.

## பிரான்ஸ் முதல் பெண்மணியின் அரைநிர்வாண படங்கள் வெளியீடு

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டேயின் காதலி நீச்சல் உடையுடன் இருக்கும் படத்தை வெளியிட்ட மூன்று பத்திரிகைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்காய்ஸ் ஹோலண்டேயின் காதலி வெலெரி ட்ரையர்வெய்லர்.

விடுமுறையின் போது இவர்கள் இருவரும் மத்திய தரைகடல் பகுதியில் உள்ள ஒரு தீவுக்கு சென்றனர்.

ஆட்கள் நடமாட்டமற்ற அந்த தீவில் இருவரும் நீச்சல் உடையில் குளித்தனர். இந்த காட்சியை பிரான்ஸ் நாட்டின் பிரபல மூன்று பத்திரிகைகள் அட்டை படமாக வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி காதலியின் அந்தரங்க விஷயத்தை அட்டை படத்தில் வெளியிட்டதற்காக இந்த பத்திரிகைகள் மீது, 17 லட்ச ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் மூன்று பத்திரிகை களுக்




கும் தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

# இந்திய செய்திகள்

## மின்பற்றாக்குறையில் சிக்கியுள்ள தமிழகத்தை மீட்க பிரதமருக்கு ஜெயலலிதா அவசர கடிதம்

கடும் மின் பற்றாக்குறையால் சிக்கி தத்தளித்து வரும் தமிழகத்திற்கு கூடுதல் மின்சாரம் அளிக்க வேண்டும் என கோரி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.




தமிழகத்தின் மின்தேவை 13 ஆயிரத்து 500 மெகாவாட் ஆகும். ஆனால் உற்பத்தியாகும் மின்சாரம் வெறும் 9500 மெகாவாட் மட்டுமே. இதனால் சுமார் 4 ஆயிரம் மெகாவாட் மின் பற்றாக்குறை காரணமாக தமிழகத்தில் 16 மணி நேர மின்வெட்டு உள்ளது.

இந்நிலையில் பிதமருக்கு முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில்,

நவம்பர் முதலாம் திகதி முதல் 2013ஆம் ஆண்டு மார்ச் 31 வரை, தங்கள் மின்நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை மறு ஒதுக்கீட்டு முறையில், மத்திய அரசிடம் ஒப்படைக்க டில்லி அரசு முடிவு செய்திருப்பதாகவும், அந்த மின்சாரத்துடன் கூடுதலாக ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தையும், தற்போது நிலவும் கடுமையான மின்வெட்டை கருத்திற்கொண்டு, தமிழகத்திற்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மத்திய அமைச்சரவையில் பதினைந்து புது ஹீரோக்களை அறிமுகப்படுத்த பிரதமர் முடிவு

மத்திய அமைச்சரவையில் 15 புதுமுகங்களை சேர்க்க பிரதமர் மன்மோகன் சிங் முடிவு செய்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



ஆளும் காங்கிரஸ் செய்த விலையேற்றம், ஊழல்களில் சிக்கியது போன்றவை அக்கட்சிக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சமீபத்தில், அந்நிய முதலீட்டுக்கு அனுமதி கொடுத்தது தொடர்பாக திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் 6 அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகியதை அடுத்து பல்வேறு முக்கியத் துறைகளுக்கு அமைச்சர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், மத்திய அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் மரணம் அடைந்ததால் மேலும் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது.


இதற்கிடையே, கூட்டணிக் கட்சிகள் முக்கிய அமைச்சர்கள் பதவியைக் கேட்டு நிர்பந்திப்பதால், எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாமல் மத்திய அரசு குழம்பியுள்ளது.

எனவே, சரியாக செயல்படாத அமைச்சர்களை கட்சிப் பணியாற்ற அனுப்பிவிட்டு புதிய நபர்களை அமைச்சரவையில் சேர்க்க ஆளும் மத்திய அரசான காங்கிரஸ் தலைவர் சோனியா தரப்பு ஆலோசித்து வருகிறது.

அந்த வகையில், 15 புதிய முகங்கள் மத்திய அமைச்சரவையில் சேர்க்க பிரதமர் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

## இந்தியா தான் எங்களுடைய கூட்டாளி பகிரங்கமாக அறிவித்தது சீனா

இந்தோ- சீனா போர் நடந்து அரை நூற்றாண்டுகளை கடந்துள்ள நிலையில் இந்தியா தனது நட்பு நாடு என பகிரங்கமாக சீனா அறிவித்துள்ளது.



கடந்த 1962ஆம் ஆண்டு நடந்த இந்திய சீன போரில் பங்கேற்று உயிர்நீத்த வீரர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கடந்த 20ஆம் திகதி புதுடெல்லியில் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், இந்நிகழ்ச்சி குறித்து சீனாவின் வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் ஹாங் லீ, தற்போதைய சூழலில் உலகம் பெரும் மாற்றங்களைச் சந்தித்து விட்டது.

வேகமாக வளர்ந்து வரும் இந்தியா, சீனா வளர்ச்சிக்கான வாய்ப்புகளை தேடி வருகின்றன.

தற்போதைய சூழலில், சீனா இந்தியாவை ஒரு கூட்டாளியாகத்தான் பார்க்கின்றதே அன்றி எதிரியாக பார்க்கவில்லை என்றார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்ற சீனா எப்போதும் தயாராக இருப்பதாகவும் லீ தெரிவித்தார்.

## மிஸ் சென்னை அழகி மர்மமான முறையில் மரணம்

மிஸ் சென்னை அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிதுஷி டேஷ் போர்டே மும்பையில் மர்மமான முறையில் பிணமாக கிடந்தார்.



கடந்த 2006ஆம் ஆண்டு மிஸ் சென்னை அழகிப் போட்டியில் பட்டம் வென்றவர் பிதுஷி. இவர் கேரளாவைச் சேர்ந்த தனது கணவருடன் மும்பை அந்தேரி மேற்குப் பகுதியில் வசித்து வந்தார்.

திங்கள்கிழமை இரவு 9 மணிக்கு பிதுஷியின் கணவர் கேதார் வீட்டுக்கு வந்த போது, கதவு பூட்டப்பட்டிருந்தது. இதையடுத்து பலமுறை காலிங் பெல்லை அழுத்தியும் கதவு திறக்கப்படவில்லை.

இதையடுத்து அவர் தன்னிடமிருந்த இன்னொரு சாவியை வைத்து கதவைத் திறந்து உள்ளே சென்றார். அங்கு டிராயிங் ரூமில் பிதுஷி இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அதிர்ந்தார்.

இதையடுத்து உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவர் கொலை செய்யப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது. அவர் விழுந்து கிடந்த இடம் ஒரு கண்ணாடி ஷெல்ப் இருந்த இடமாகும். அவருக்கு சர்க்கரை வியாதி இருந்துள்ளது.

எனவே மயக்கமடைந்து கண்ணாடி ஷெல்ப் மீது விழுந்து அதனால் கண்ணாடி உடைந்து குத்தி அவருக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இருப்பினும் பொலிஸார் கொலை வழக்குப் பதிவு செய்து தொடர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவரது கணவரையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

## டுவிட்டரில் மோடி ஆதரவாளர்கள் ஒரு மில்லியனாக அதிகரிப்பு

குஜராத் மாநில முதல்வர் நரேந்திரமோடிக்கென டுவிட்டர் இணைய தளத்தில் தனக்கென புதிய பக்கத்தை தொடங்கியுள்ளார். கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் சுமார் 4 இலட்சம் ஆதரவாளர்கள் மட்டுமே மோடியை ஆதரித்து வந்தனர். இந்நிலையில் ஒராண்டு கால இடைவெளியில் இதன் எண்ணிக்கை ஆறு இலட்சம் அதிகரித்து சுமார் ஒரு மில்லியனாக அதிகரித்துள்ளது.



இது குறித்து மோடியின் மீடியா ஆலோசகர் ஜகதஷ்பவ்சார் கூறுகையில் மோடியின் புகழ் இந்திய மாநிலங்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் பரவத் துவங்கியுள்ளதைக் காட்டுவதாக கூறியுள்ளார். கடந்த 2009இல் மோடி டுவிட்டரை பயன்படுத்த துவங்கியபோது ஒரு லட்சம் ஆதரவாளர்கள் மட்டுமே இருந்தனர். தற்போது அதிகரித்துள்ள இந்த எண்ணிக்கை மோடியின் மீதான நல்லெண்ணத்தை பிரதிபலிப்பதாக உள்ளது எனக் கூறினார்

டிசம்பர் மாதம் 13 மற்றும் 17-ஆம் தேதிகளில் மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் மூன்றாவது முறையாக முதல்வர் பதவிக்கு போட்டியிட உள்ள அவர் கடந்த செப்டம்பர் மாதம் விவேகானந்தா யுவ விகாஸ் யாத்திரையை மோடி தொடங்கியுள்ளார்.



டில்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற தசரா நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். வில்லில் அம்பை பூட்டி தொடுக்க தயாராகும் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி.

## எண்பது வயதுத் தாயை சொத்திற்காக உயிருடன் தீயிட்டு எரித்த மகன்

ஆண்டிபட்டி அருகே சொத்துக்காக தாயை உயிரோடு எரித்து கொன்ற மகனை பொலிசார் தேடி வருகின்றனர்.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி, வைகை புதூரைச் சேர்ந்த முத்துக்காமுதேவர் மனைவி சக்கரையம்மாள் 80. இவரது கணவர் இறந்த பின், அவரது மகன் நடராஜன் 60, சொத்துக்களை விற்று விரயம் செய்துள்ளார்.

தாய் சக்கரையம்மாளை பராமரிக்காமல் அவரது பெயரில் இருந்த 3 சென்ட் இடத்தை, தனது பெயருக்கு மாற்றி எழுதித்தருமாறு தாயை அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ளார்.

இது தொடர்பாக இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இரவு 9.30 மணிக்கு சக்கரையம்மாளின் கூக்குரல் கேட்டு அக்கம்பக்கத்தினர் வீட்டிற்கு சென்று பார்த்த போது, தீப்பிடித்து எரிந்த நிலையில் அலறிக்கொண்டிருந்தார்.

அவரை காப்பாற்றி தேனி மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். நேற்று மாலை 3 மணிக்கு சிகிச்சை பலனிற்றி உயிரிழந்தார். தனது மகன் நடராஜன்தான் வீட்டில் இருந்த மண்ணெண்ணெய்யை, தன்மீது ஊற்றி தீ வைத்து விட்டதாக மரண வாக்கு மூலத்தில் சக்கரையம்மாள் தெரிவித்துள்ளார்.

ஆண்டிபட்டி இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையில் பொலிசார் கொலை வழக்குப் பதிவு செய்து நடராஜனைத் தேடி வருகின்றனர்.

# சம்பியன்ஸ் லீக்கின் முதலாவது அரையிறுதி

CHAMPIONS LEAGUE TWENTY 20

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் டுவென்டி டுவென்டி தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது. டெல்லி டெயாடெவில்ஸ் அணிக்கும், தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்குமிடையிலேயே இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.

கிங்ஸ்மீட், டேர்பனில் இடம்பெறவுள்ள இப்போட்டி நேற்று இலங்கை நேரப்படி 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இதில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி குழு "ஏ" இல் 4 போட்டிகளில் பங்குபற்றி இரண்டு போட்டிகளில் வெற்றியும், 2 முடிவற்ற போட்டிகளையும் சந்தித்து 12 புள்ளிகளுடன் குழுவில் முதலிடத்தைப் பெற்றிருந்தது.

ஹைவெல்ட் லயன்ஸ் அணி குழு "பி" இல் 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும், ஒரு தோல்வியையும் சந்தித்து 12 புள்ளிகளுடன் குழுவில் இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தது.

போட்டி இடம்பெறும் மைதானங்களில் தொடர்ச்சியான மழை காரணமாக இன்றைய போட்டி பாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய போட்டி நாள் பாதிக்கப்பட்டால் மேலதிக நாளை ஒதுக்குவது தொடர்பான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு மேலதிக நாள் ஒதுக்கப்படாவிட்டால் குழுநிலையில் அதிக வெற்றிகளோடு காணப்படும் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும். எனவே லயன்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பேறும். இரு அணிகளும் தங்களுடைய கடைசிப் போட்டியில் விளையாடிய அணிகளையே மீண்டும் ஈடுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கம்பீர், சேவாக்கைத் தாண்டி இந்தியாவிடம் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இல்லை: அக்ரம்



தடுமாறிவரும் இந்தியாவின் ஆரம் பத்துடுப்பாட்ட வீரர்களான கௌதம் கம்பீர், விரேந்தர் செவாக் ஆகியோரைத் தாண்டி இந்தியாவி டம் சிறந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கள் இல்லை என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

ராகுல் ட்ராவிட், வி.வி.எஸ்.லக்ஷ் மன் ஆகியோர் ஓய்வு பெற்றுள்ள நிலையில் இந்தியாவின் மத்திய வரிசை அனுபவமற்றுக் காணப்படு வதாகத் தெரிவித்த வசீம் அக்ரம், தன் காரணமாக அனுபவம் வாய்ந்த ஆரம்பத்துடுப்பாட்ட ஜோடியான விரேந்தர் செவாக், கௌதம் கம்பீர் ஜோடியை நீக்குவதற்கு இந் தியா சிந்திக்காது என எண்ணுவ தாக அவர் தெரிவித்தார்.

இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் அடுத்த சில தொடர்களை இந்தியாவிலேயே விளையாடவுள்ள நிலையில் கௌதம் கம்பீர், விரேந்தர் செவாக் ஆகியோர் ஓட்டங்களைக் குவிப்பர் எனவும் வசீம் அக்ரம் தெரிவித்தார்.

நவம்பரிலிருந்து இந்தியாவின் பெரும்பாலான போட்டிகள் இந்தியாவிலேயே இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்திய அணி மிகச்சிறந்த அணிகளான இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற அணிகளை எதிர்கொள்ளும் எனவும், இந்தத் தொடர்கள் விரேந்தர் செவாக், கௌதம் கம்பீர் போன்ற வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

விரேந்தர் செவாக், கௌதம் கம்பீர் இருவரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் தங்கள் அணிகளின் இறுதிப் போட்டிகளில் தங்கள் சிறந்த ஃபோர்மின் ஒரு பகுதியை வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்த வசீம் அக்ரம், அதன் காரணமாக இருவரினதும் தரம் குறித்துக் கேள்வியெழுப்புவது முறையற்றது எனத் தெரிவித்தார்.

ஆகவே இந்திய ஆடுகளங்களில் இந்தியாவின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களை மாற்றுவதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை முன்வராது எனத் தெரிவித்த அவர், விரேந்தர் செவாக், கௌதம் கம்பீர் [illegible] வரும் மிகச்சிறப்பாகச் செயற்படுவர் எனவும் தெரிவித்தார்.

# லசித் மாலிங்க உப தலைவர்

இலங்கை கிரிக்கெட் இருபதுக்கு 20 அணியின் உப தலைவராக லசித் மாலிங்க நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் சுமார் ஒரு வருட காலத்துக்கு மாத்திரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நியூஸிலாந்துடனான இருப்பதுக்கு - 20 போட்டியின் போது இலங்கை அணிக்கு அஞ்சலோ மெத்திவ்ஸ் தலைவராகவும் உப தலைவராக லசித் மாலிங்கவும் செயற்படவுள்ளனர்.



# இந்தியாவை சொந்த மண்ணில் வீழ்த்துவது கடினம்:

அவுஸ்திரேலியாவுக்கெதிராக ஆஷஸ் தொடரை வெல்வதை விட இந்திய அணியை இந்திய மண்ணில் வீழ்த்துவது மிகப்பெரிய விடயம் என்று இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் மேட் பிரையர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவை அவுஸ்திரேலியாவில் நாங்கள் 24 ஆண்டுகளாக வீழ்த்தவில்லை. கடந்த முறை அவுஸ்திரேலியாவை அதன் மண்ணில் வீழ்த்தினோம்.

ஆனால், 27 ஆண்டுகளாக இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்த முடியவில்லை. எனவே இது ஒரு மிகப்பெரிய முயற்சியாகும். இங்கிலாந்து அணி இந்தியா வுக்கு இந்த மாத இறுதியில் சென்று டெஸ்ட், ஒருநாள், மற்றும் ரி20 கிரிக்கெட்டில் பங்கேற்க உள்ளது என்றும் மீண்டும் கெவின் பீட்டர்சன் இங்கிலாந்து அணிக்குத் திரும்பியுள்ளது இங்கிலாந்திற்கு பலம் எனவும் கூறியுள்ளார்.

# கூடைப்பந்தாட்ட அரையிறுதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பதாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 67:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மோதியது.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் சுற்றில் 20:5 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாம் சுற்றில் 15:6 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாவது சுற்றினை 22:0 என்ற புள்ளி அடிப்படை யிலும், இறுதிச் சுற்றை 10:7 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்றது.

# இங்கிலாந்துக்கெதிரான இந்திய ஏ அணியில் யுவராஜ் சிங்

இந்தியா ஏ அணி இங்கிலாந்து அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் இம்மாதம் 30ம் திகதி விளையாட உள்ளது.

இந்த போட்டிக்கான இந்திய ஏ அணியில் துலீப் டிராபியில் கடந்த வாரம் அதிரடியாக இரட்டைச் சதம் அடித்த யுவராஜ் சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் ரோகித் ஷர்மாவுக்கு இடம் கேள்விக் குறியாகியுள்ளது.



அவர் நீண்ட காலமாக தனது திறமைக்கேற்ப ஆட முடியாமல் திணறி வருகிறார்.

புதிய தெரிவுக்குழு தலைவர் சந்தீப் பாட்டீல் அறிவிக்கும் இந்த முதல் அணியில் சுரேஷ் ரெய்னா அணித்தலைவராக உள்ளார்.

இங்கிலாந்து பயிற்சி ஆட்டத்தில் இந்தியாவின் பலமான சுழற்பந்தை எதிர்கொண்டுவிடக்கூடாது என்பதற்காக சுழற்பந்து வீச்சாளர்கள் இல்லாமல் விளையாட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ரெய்னா, யுவராஜ், ரஹானே, மனோஜ் திவாரி அணியில் இடம் பெற்றுள்ளனர். ராஜஸ்தான் அணியின் ராபின் பிஸ்ட் மற்றும் அசோக் மெனாரியா ஆகியோருக்கு தங்களது திறமையை நிரூபிக்க இந்தியா ஏ அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முரளி விஜய், முகுந்த், அம்பாதி ராயுடுவுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மனோஜ் திவாரியின் உத்தி டெஸ்ட் போட்டிகளுக்கு ஒத்து வராது என்று முந்தைய தெரிவுக்குழு முடிவெடுக்க சந்தீப் பாட்டில் குழு வேறுமாதிரி யோசித்துள்ளது.

பந்து வீச்சில் இர்பான் பதான், அசோக் டிண்டா, வினய் குமார், பர்வீந்தர் அவானா, ஆகியோர் உள்ளனர். இதில் அவானாவு மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் தனது முதல் ஸ்பெல் பந்து வீச்சிலேயே உடல் நிலை சரியில்லாமல் போனது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளை பயமில்லாமல் நடத்தலாம்: -சனத்



பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை பயமின்றி நடத்தலாம் என்று இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் சனத் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார். கராச்சியில், பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் மற்றும் சர்வதேச உலக பதினொருவர் அணிகளுக்கு இடையிலான இரண்டு டி20 போட்டிகள் நடைபெற்றது. இதில் சர்வதேச உலக பதினொருவர் அணியின் அணித்தலைவராக இலங்கை வீரர் ஜெயசூர்யா நியமிக்கப்பட்டார்.

போட்டிகள் முடிந்த பின்பு, சர்வதேச உலக பதினொருவர் அணி வீரர்கள் தங்களது சொந்த ஊருக்கு சென்ற போதும், ஜெயசூர்யா கராச்சியில் தங்கி, ஷொப்பிங் மற்றும் சில சுற்றுலா தலங்களை பார்வையிட்டார்.

இதுகுறித்து ஜெயசூர்யா கூறுகையில், பாகிஸ்தான் மற்றும் உலக பதினொருவர் அணிகளுக்கு இடையிலான இரண்டு ரி20 போட்டிகளின் மூலம், பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச போட்டிகளை நடத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானில் பாதுகாப்பு குறித்து எவ்வித பிரச்சினையும் இருப்பதாக தெரியவில்லை. எனவே ஒவ்வொரு நாடுகளும், பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளில் விளையாட முன்வர வேண்டும்.

பாகிஸ்தான் ரசிகர்கள் தங்களது சொந்த ஊரில் சர்வதேச போட்டிகளை காண மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

கடந்த 2009ல் பாகிஸ்தான் வந்த இலங்கை வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் மறக்க முடியாதது அது கொடூரமான சம்பவம்.

தற்போதுள்ள சூழ்நிலையில், இதுபோன்ற மோசமான நிகழ்வுகள் அரங்கேற வாய்ப்பு இல்லை என்றும் இதனால் இலங்கை கிரிக்கெட் வாரியத்திடம் இதுகுறித்து பேசி, விரைவில் இலங்கை அணி பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முயற்சி மேற்கொள்வேன் எனவும் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 26.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது